பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 16, வியாழக்கிழமை 01.12.2016 | கதிர் 26

## கிராம சேவையாளர் வவுனியாவில் கைது

வ்வுனியா மூன்று முறிப்பு பிரதேசத்திற்குட்பட்ட கிராம சேவகர் ஒருவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு கிடைக்கப்பெற்ற நிலையில்

பக்கம் 20 »



# ஒற்றையாட்சிக்கு நாம் இணங்கவேயில்லை!

### சுமந்திரன் நாடாளுமன்றில் அறிவிப்பு

கொழும்பு, டிசெம்பர் 01


"நாம் 'ஒரு நாடு, பிளவுபடாத ஒரு நாடு, பிரிக்கப்படமுடியாத ஒரு நாடு' என்ற விடயத்துக்கே இணங்கியுள்ளோம். ஆனால் ஒற்றையாட்சிக்கு நாம் இணங்கவில்லை."

-இப்படி நேற்றுநாடாளுமன்றத்தில்திட்டவட்டமாகவும்தெளிவாகவும்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்நிலைப்பாட்டை அறிவித்தார்யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன்.

பக்கம் 20 »

## வருகிறது 'நடா' புயல்!

### யாழ்.குடாநாடும் இலக்காகலாம்




கொழும்பு, டிசெ.01

வங்காளவிரிகுடாவின்தென் மேற்குபக்கத்தில்முல்லைத்தீவு கரையிலிருந்து சுமார் 400 கிலோமீற்றர்தொலைவில்நேற்று மாலை மையம் கொண்டிருந்த பெரும்தாழமுக்கம் இன்று 'நடா'

பக்கம் 20 »

## கோட்டாபயவின் ஒரே மகனுக்காக அமெரிக்காவில் கோடிக் கணக்கான ரூபா அரச நிதி துஷ்பிரயோகம்

### துணைத் தூதுவருக்கான இல்லத்தில் சொகுசு வாழ்க்கை

கொழும்பு, டிசெ.01

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலராக இருந்த காலத்தில்அமெரிக்காவில்தங்கியிருந்த அவரின்ஒரேமகனுக்காக பல கோடி ரூபா அரச நிதி வெளிவிவகார அமைச்சு ஊடாகசெலவிடப்பட்டுதுஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

இது பற்றிய விவரங்களை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று நாடாளுமன்றத்தில் விலாவாரியாக வெளியிட்டார்.

வரவு - செலவுத் திட்டத்தில் வெளிவிவகார அமைச்சுக்குரிய நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இத்தகவல்களைவெளியிட்டார்.அங்கு அவர்கூறியமுக்கியவிடயங்கள் வருமாறு:-

பக்கம் 20 »

## கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்று கூடுகின்றது.

கொழும்பு, டிசெ.01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு இன்று கொழும்பில்நாடாளுமன்றக்கட்டடத்தில் கூடுகின்றது.

வடக்கு, கிழக்கில்உள்ளஎட்டு மாவட்டங்களிலும் அபிவிருத்தி மற்றும்அரசநடவடிக்கைகளில் தமதுகாத்திரமானபங்களிப்பை வழங்குவது குறித்துப் பேசுவதற்காக கூட்டமைப்பின் எம்.பிக்கள் இந்த வார இறுதி அளவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் முக்கிய அமைச்சுக்

பக்கம் 20 »

### அளப்பு அருணாசலம்



தியேட்டர் மூளை சும்மாவே... சூளைமேட்டுவழக்கைச் சமாளிக்க சுத்தி வாறார் போல...!

## வெளிவிவகார அமைச்சில் ஊழல், மோசடி விசாரணைகளை நடத்த உயர்மட்டக் குழு!

### ஜே.வி.பியின் கோரிக்கைக்கு பிரதமர் தலையசைப்பு

கொழும்பு, டிசெ.01

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் - 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டுவரை - இலங்கையின்வெளிவிவகார அமைச்சில் பெரும் ஊழல்கள், முறைகேடுகள் இடம்பெற்றன எனக்கூறப்படுவதுகுறித்துவிசாரிப்பதற்கு முழுமையான அதிகாரம்படைத்த ஒரு உயர்மட்டக் குழுவை நியமிக்க வேண்டும்.

-இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் யோசனை ஒன்றை முன்வைத்தார் ஜே.வி.பி. உறுப்பினரானசுனில்ஹந்துன்நெத்தி.

வெளிவிவகார அமைச்சுக்குரிய நிதி ஒதுக்கீட்டின் மீதான குழுநிலை விவாதத்தின் போதே இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

மேற்படி 2010 முதல் 2015 ஆம் ஆண்டுவரையான காலத்தில் வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் பல முறைகேடுகள், ஊழல்கள் குறித்து வெளிவிவகார அமைச்சர்மங்களசமரவீரநேற்று சபையில் விலாவாரியாக எடுத்துரைத்தார்.

பக்கம் 20 »

## தமிழகத்துடன் உறவை பலப்படுத்த வலியுறுத்துகிறார் டக்ளஸ் எம்.பி.!

கொழும்பு, டிசெ.01

இலங்கை அரசு தமிழ் நாட்டுடனான தனது உறவைப் பலப்படுத்துவதில் அதிகம் சிரத்தை காட்டவில்லை. அதனைப் பலப்படுத்துவதில் அதிக ஈடுபாடு காட்ட வேண்டும்.

-இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா.

நேற்று நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சுக்குரிய நிதி ஒதுக்கீட்டின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது வெளிநாட்டுக் கொள்கையில், நாம் இந்தியாவுடன்

பக்கம் 20 »

### தனிமனித உரிமையை மீறிய குற்றச்சாட்டு

## 4 லட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்துமாறு மேர்வின் சில்வாவுக்கு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, டிசெ.01

கிரிபத்கொடவில் சாதாரண பிரஜை ஒருவரின் மனித உரிமையை மீறியமைக்காக, அவருக்கு நான்கு லட்சம் ரூபா நஷ்டஈடுவழங்குமாறுமுன்னாள்அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் அமைந்துள்ள கிரிபத்கொட பிரதேசத்தில் வசிக்கும் அசித நாணயக்கார எனும் நபர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பான தீர்ப்பு வழங்கிய போது நீதிபதிகள் இந்த உத்தரவைப் பிறப்பித்தனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின்உத்தரவின்படிதனது வீட்டின் ஒரு பகுதி இடிக்கப்பட்டதாக மனுதாரர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

பக்கம் 20 »

# நானூறு கோடி ரூபா மாயமா? உடன் விசாரணை நடத்துங்கள்!

## கூட்டு எதிரணி அரசுக்குச் சவால்

கொழும்பு,டிசெ.01

நில்வள கங்கை அபிவிருத்தித் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 401 கோடியே இருபது லட்சம் ரூபா காணாமல் போயிருக்கின்றது என ஜனாதிபதி மைத்திரிபால காலிக்கூட்டம் ஒன்றில் வைத்து குறிப்பிட்ட விடயம் குறித்து விசாரணை நடத்துமாறு கூட்டு எதிரணி அரசிடம் கேட்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அங்கத்தவர் உறுப்புரிமையை மேம்படுத்தும் நோக்குடன் கடந்த வாரம் காலியில் நடத்தப்பட்ட கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றியிருந்தார்.

மேற்படி நில்வள கங்கைத் திட்டத்துக்கு 2012 இல் நிதி அமைச்சு நூறு கோடி ரூபாவை வழங்கியிருந்தது. பின்னர் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல் நாளன்று - அதாவது 2015 ஜனவரி 7ஆம் திகதி - 301 கோடியே 20 லட்சம் ரூபாவை திறைசேரி நீர்ப்பாசன அமைச்சின் திணைக்களத்துக்கு வழங்கியிருந்தது. இந்த மொத்தப்பணத்தின் - 401 கோடியே இருபது லட்சம் ரூபாவின் - கதி என்னவாயிற்று என்று தெரியவில்லை என ஜனாதிபதி காலிக்கூட்டதில் வைத்து அறிவித்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து கூட்டு எதிரணியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ்அழகப்பெரும கருத்து வெளியிட்டார்.

''ஜனாதிபதியின் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய அமைச்சுக்களுக்கு அந்தக் காலத்தில் பொறுப்பாக இருந்த அமைச்சர்கள் அவரின் தற்போதைய அரசிலேயே இருக்கின்றார்கள். ஆகவே அவர்களிடம் தான் அதனை விசாரிக்க வேண்டும்.

சீனாவைத் தளமாகக் கொண்ட நிறுவனம் ஒன்றுடன் இந்தத் திட்டம் தொடர்பான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட போது தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே மகாவலி அமைச்சராக பணியாற்றியிருந்தார். அதேபோல அக்காலத்தில் நீர்ப்பாசன அமைச்சராக இருந்தவர் தற்போதைய அரசின் போக்குவரத்து அமைச்சராகவிருக்கும் நிமால் சிறிபால டி சில்வாதான்.

''ஆகவே என்ன நடந்தது என்பதை விசாரித்து அந்தப் பணத்துக்கு யார் பொறுப்பு என்பதை இந்த அரசுதான் கண்டறிந்து வெளிப்படுத்த வேண்டும்'' இப்படி டலஸ் அழகபெரும மேலும் தெரிவித்தார்.

# போக்குவரத்து விதிகள் மீறலுக்கான தண்டனை அதிகரிப்பு நல்ல விடயம்

## நியாயப்படுத்துகிறார் சுகாதார அமைச்சர் ராஜித

கொழும்பு டிசெ.01

போக்குவரத்து விதி மீறலுக்கான தண்டம் 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டமை மிகவும் நல்ல விடயம் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

போக்குவரத்தின் போது பிரதான ஏழு விதிகள் மீறப்படுவதற்கான தண்டனை அதிகரிப்பு தொடர்பான யோசனையை முதலில் நானே முன்வைத்தேன்.

நாட்டில் இடம்பெறுகின்ற விபத்துக்களினால் ஆண்டுதோறும் சுமார் 25 ஆயிரம் பேர் வரை உயிரிழப்பதுடன் பலர் காயமடைகின்றனர். இவர்கள் தொடர்பான செலவினங்களை சுகாதார அமைச்சே பொறுப்பேற்க வேண்டி இருக்கின்றது.

சரியான சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி செலுத்தப்படுகின்ற தனியார் பஸ்களினால் பாரியளவில் விபத்துக்கள் ஏற்படுகின்றன எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (ம)

# பரிசளிப்பு விழா

துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை முதல்வர் சோ.புஷ்பாகரன் தலைமையில் பாடசாலை அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் வட மாகாணசபை உறுப்பினர் வே.சிவயோகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-32)

# அப்பாவி நோயாளர்களை அடகுவைத்து போராட்டம்

## வைத்தியர்களின் பகிஷ்கரிப்பை சாடுகிறார் ராஜித



கொழும்பு,டிசெ.01

அரச வைத்திய அதிகாரிகள் அப்பாவி நோயாளர்களை அடகு வைத்தே பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றனர் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

தனது கோரிக்கைக்கமைய எந்தப் பேச்சுவார்த்தைக்கும் வருகை தராமல் வைத்தியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டார்கள் எனவும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு மக்கள் எதிராக இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

வரவு - செலவுத் திட்ட வரி தொடர்பில் ஒருசில வரித்துறை அதிகாரிகளின் தவறான விளக்கத்தைப் பெற்றுக் கொண்டு வைத்திய அதிகாரிகள் இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். (ம)

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின்

# அடையாள வேலை நிறுத்தத்துக்கு தீர்வு இன்றேல் அடுத்தது என்ன?

## செவ்வாய்க்கிழமை முடிவு

கொழும்பு நவ.01

தாங்கள் நேற்று முன்னெடுத்த அடையாள வேலை நிறுத்தத்தின் பின்னர் சரியான தீர்வொன்று கிடைக்காவிட்டால், அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கூடும் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், அரச பல் வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் அரச ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆகியன இணைந்து கொள்ள உள்ளன என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் நவீந்திர டி சொய்சா கூறினார்.

இந்த முறை வரவு - செலவு திட்டத்தினூடாக இலவசக் கல்வி மற்றும் இலவச சுகாதார சேவை ஆகியவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அனைத்து அமைச்சர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்தோம். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டி ஏற்பட்டது என்றும் அவர் கூறினார்.

இந்த முறை வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்குரிய நிவாரணங்கள் குறைக்கப்பட்டு மதுபான நிறுவனங்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுநீரக நோயாளர்களுக்கு இரத்த மாற்று சிகிச்சை செய்வதற்கான இரண்டு பிரிவுகளை நிர்மாணிப்பதற்கு இந்தியாவுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதன் ஊடாக இலங்கையின் சுகாதாரத் துறையில் இந்தியா தலையிடுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

இதேவேளை இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அரச பல்வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் விபுல விக்ரமசிங்க, அத்தியாவசிய மருந்து வகைகளின் விலைகளைக் குறைப்பதாக கூறி சுகாதார அமைச்சரும் நிதியமைச்சரும் மோசடியில் ஈடுபட்டுள்ளனர். என்றார். (ம)

# மூத்த ஒலிபரப்பாளர் பொன்மணி ஆஸ்திரேலியாவில் காலமானார்



யாழ்ப்பாணம், டிசெ.01

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் முன்னாள் பணிப்பாளரும் மூத்த ஒலிபரப்பாளருமான சங்கீத சிரோன்மணி திருமதி பொன்மணி குலசிங்கம் காலமானார்.

சில நாள்கள் சுகவீனமுற்றிருந்த திருமதி குலசிங்கம் ஆஸ்திரேலிய நேரப்படி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மெல்பேர்ணில் காலமானார். இறக்கும் போது அவருக்கு 88 வயது.

சிறுவர் மலர், மங்கையர் உலகம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு நிலையத் தயாரிப்பாளராக பங்களிப்பு வழங்கி, ஆரம்பகாலத்தில் மாதர் பகுதி நிகழ்ச்சியைத் திறம்படத்தொகுத்தளித்து, 'வானொலி அக்கா' என்ற பெயரில் நேயர்கள் மத்தியில் பெரும் புகழ் பெற்றவர்.

இவரது காலத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் வர்த்தக சேவை ஒலிபரப்பு விஸ் தரிக்கப்பட்டது.

தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு கலைஞர்களை அழைத்து வந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்தார்.

அமரர் பொன்மணி குலசிங்கம் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் நிர்வாகத் திறமை மற்றும் கலை ஆற்றல்கள் மூலம் தமிழ்நிகழ்ச்சிகளின்தரத்தை மேம்படுத்துவதற்கு அவர் ஆற்றிய பணிகளை மூத்த ஒலிபரப்பாளர்கள் நினைவு கூர்ந்துள்ளனர்.

இவர் உயர்தரக் கல்வி வரை பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கன்னியர் கல்லூரியில் பயின்று, இசைக் கல்வியைச் சென்னை கலாஷேத்திராவில் பயின்று, சென்னைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத சிரோன்மணி பட்டத்தையும் கலாஷேத்திராவில் வாய்ப்பட்டுக்கான முதற்தர டிப்ளோமாச் சான்றிதழையும் பெற்றவர்.

இவர் தனது பதினான்காவது வயதிலிருந்து இசைத் திறமையைக் காட்டும் வானொலிப் பாடகியாக விளங்கினார். 1956 ஆம் ஆண்டு சிறுவர் மற்றும் மகளிர் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக வானொலியில் சேர்ந்து கொண்ட இவர், படிப்படியாக உயர்ந்து இசைக் கட்டுப்பாட்டாளர், மேலதிகப் பணிப்பாளர், பணிப்பாளர் என்ற நிலையை எய்தினார்.

இவர் புகழ்பெற்ற இசையமைப்பாளர் முத்துசாமி தலைமையில் இயக்கிய இலங்கைப் பாடகர்களின் ஈழத்துப் பாடல்கள் வரவேற்பைப் பெற்றன. இப்பாடல்களை அக்காலத்தில் சிங்கப்பூர் வானொலி ஒலிபரப்புக்காகக் கொள்வனவு செய்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான புதியகட்டடத் தொகுதி விரைவில் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தில்!

யாழ்ப்பாணம்,டிசெ.01

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான கட்டடத் தொகுதியை அரசாங்கம் அமைக்கவிருப்பதாக நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற் றும் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவையின் இணைப் பேச்சாளருமான கயந்தகருணாதிலக தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களைஅறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற போதேஅமைச்சர் இதனைக் கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

'ஜிக்கா' அமைப்பினால் இதற்கான நிதியுதவி வழங்கப்படவுள்ளது. அதற்கான வேலைத்திட்டத்தின் ஆலோசனைச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தத்தை அமைச்சரவையின் மூலம் நியமிக்கப்பட்ட ஆலோசனை கொள் முதல் குழுவின் சிபார்சின் அடிப்படையில் வழங்குவதற்கு உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவ ணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. என்றார்.

# வடக்கு, கிழக்கில் 4ஆம், 5ஆம் குழந்தை பெற்றெடுத்தால் பராமரிப்பதற்கு ஊக்குவிப்பு

## -புதிய திட்டத்தை ஆரம்பிக்கிறது சிவசேனை-

யாழ்ப்பாணம்,டிசெ.01

வடக்கு, கிழக்கில் 4 ஆவது, 5 ஆவது குழந்தைகளைப் பெற்றெடுத்தால் அந்தக் குழந்தைகளின் பராமரிப்புக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குவதற்கு சிவசேனை அமைப்பு தீர்மானித்துள்ளது.

வீழ்ச்சியடைந்து வருகின்ற சைவத் தமிழரின் இன விகிதாசாரத்தையும் சிவபூமியின் பூர்வீக கிராமங்களில் இருப்பையும் நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

சிவசேனையின் இணைத் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தனின் 75 ஆவது அகவையை முன்னிட்டு சிவசேனை அமைப்பு சைவ அறப்பணிநிதியத்தினூடாக இந்தச் செயற்றிட்டத்தை ஆரம்பிக்க இருக்கின்றது.

4 ஆவது, 5 ஆவது குழந்தைகளைப் பெற்றெடுத்து அவர்களுக்கு தமிழில் பெயர் சூட்டினால் அவர்கள் இந்த உதவியைப் பெறமுடியும். அதிலும் அந்தக் குழந்தைகளை பராமரிப்பதற்கான உதவி தேவைப்படுவோர் அல்லது பொருளாதாரத்தில் பின்னடைந்தோர் இந்த உதவியைப் பெறமுடியும்.

கார்த்திகை மாத இறுதியில், சச்சிதானந்தனின் பிறந்த நட்சத்திரம் அன்று முதற்கட்டமாக 75 மழலைகளின் பெயரில் பணம் வைப்பிலிடப்படவிருகின்றது. 2016 ஆம் ஆண்டு 4 ஆவது, 5 ஆவது குழந்தையாகப் பெற்றெடுத்த, உதவி தேவைப்படுவோர் இதற்காக தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

கஷ்ட நிலைக்கு மத்தியிலும் குழந்தைகளைப் பெற்றெடுத்து தமிழிலில் பெயர் சூட்டப்பட்டிருக்கும் குழந்தைகளைத் தேர்வு செய்வதற்கான பணியில் சிவசேனையின் மாவட்ட இணைப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சைவத் தமிழ் அன்பர்களின் நிதியுதவிகளைப் பெற்றே சிவசேனை இந்தச் செயற்றிட்டத்தை ஆரம்பிக்கவிருக்கின்றது. எனவே, இந்தப் பணி தொடர்வதற்கு அனைவரையும் ஆதரவுக் கரம் நீட்டுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த தொடர்பணியிலும் பெண் தலைமைத்துவ மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் பணிகளிலும் ஈடுபடவிரும்புபவர்கள் ஆகக் குறைந்தது 200 ரூபாவை மாதாந்தம் வைப்பிலிட முன்வருமாறும் சைவத் தமிழ் உறவுகளிடம் சிவசேனை அமைப்புக் கேட்டுக்கொண்டுள்ளது. மேலதிக விவரங்களை சிவசேனையின் இணைப்பாளர்கள் சிவத்திரு கோடிசுவரன் 0779994424, காண்டீபன் 0770870414 ஆகியோரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தச் சைவ அறப்பணி நிதியத்தின் மாதாந்த நிதிக் கூற்று தங்களுக்கு அறியத் தரப்படும் என்றும் சிவசேனை அறிவித்துள்ளது. (ம)

## 'வரலாறுகளை ஆவணப்படுத்த தகவல்கள் தேவை'

இலக்கிய, சமய மற்றும் நகர வரலாறுகளை ஆவணப்படுத்த அவை தொடர்பான நூல்கள் தகவல்களைத் தந்துதவுமாறு பருத்தித்துறை நகர சபை பொது மக்களிடம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

எமது மாவட்டம், எமது நகரம் ஆகியவற்றின் வரலாறுகள் மற்றும் இலக்கியம், சமய வரலாறுகள் தொடர்பான புத்தகங்களை, தகவல்களை வைத்திருப்போர் அவற்றை பருத்தித்துறை பொதுநூலகத்தில் ஒப்படைத்து ஆவணப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு குறித்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-30)

## ஒட்டுசுட்டானில் நாகதம்பிரானுக்கு கும்பாபிஷேகம்

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நாகதம்பிரானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதால் நாளை வெள்ளிக்கிழமை மாலை கர்மாரம்பம் நடைபெற்று, இரவு ஸ்தூபி நாகதம்பிரான் பிரதிஷ்டை நடைபெறும்.

3ஆம் திகதி சனிக்கிழமை அடியவர்கள் காலை முதல் மாலை வரை நாகதம்பிரானுக்கு பாலாபிஷேகம் செய்யலாம், 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணியளவில் மூலவர் அபிஷேகத்தைத் தொடர்ந்து கும்பாபிஷேகம் நடைபெற்று விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறும்.

கும்பாபிஷேக நிகழ்வில் அடியார்கள் அனைவரையும் கலந்து கொண்டு எம் பெருமானின் பேரருளைப் பெறுமாறு ஒட்டுசுட்டான் ஆலய இறைபணி செம்மல்கள் முகாமைத்துவ சபையினரும் உபயகாரரும் தெரிவித்துள்ளனர்.

(இ-7)

## சர்வோதயத்தில் கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட சர்வோதயத்தின் பொறுப்பிலுள்ள தேசோதய சபை, ஐக்கிய மதங்களின் ஒன்றியம், சமாதான நீதவான்கள் அமைப்பு, பிரஜைகள் குழு ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாவட்ட சர்வோதய நிலையத்தில் இணைப்பாளர் சிறி.யுகேந்திரா தலைமையில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் எதிர்வரும் 11ஆம் திகதி சர்வோதயத்தின் தந்தை கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன வருகை, புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடல், யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மாநாடு ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன.

உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் முன்னேற்பாடுகளும் செயற்படுத்தப்படவுள்ளதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தலைவர் நா.தனேந்திரன் அறிவித்துள்ளார். (இ-19)

## மங்கையர்க்கரசி வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை

நல்லூர், டிசெ.01

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் மகேசன் கஜேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

பழைய மாணவரும், நல்லை ஆதீனத்தின் குரு முதல்வரும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வுக்கு யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரி மற்றும் யாழ்.நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயங்களின் முன்னாள் அதிபர் இரத்தினம் பாலகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திருமதி செந்தில்மணி பாலகுமார் பரிசில்களை வழங்குவார். அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு பாடசாலை நிர்வாகமும், பழையமாணவர் சங்கமும் அழைப்பு விடுத்துள்ளன.

(இ-7)

## வட்டு.கார்த்திகேய வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை, டிசெ.01

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும்.

உடுக்கியவளை விநாயகர் தேவஸ்தானத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ ந.பிரசாந்தசர்மாவின் ஆசியுரையுடன் ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வுக்கு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா பிரதம விருந்தினராகவும், மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஆ.காந்தநேசன், வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி திருமதி ரதினி காந்தநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், கௌரவ விருந்தினராக வட்டுக்கோட்டை தெற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத் தியோகத்தர் சி.சிவதரனும் கலந்துகொள்வர். (இ-7)

விரைவில்
எமது யாழ் மண்ணில்...
சியன
யாழ்ப்பாணம்
உங்கள் வீட்டு கூரைகளுக்கு புதிய அத்தியாயம் ஆரம்பம்...
இல்லங்களுக்கான நவீன கூரைத் தெரிவுகள்...
Hospital Road, Jaffna.
[வேம்படி சந்திக்கு அருகில்]
077 9494200
jaffnasiyana
(C/097)

யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பத்துறையில் சாதனை படைத்து வரும் விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனமாக விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி இனங்காணப்பட்டுள்ளது. பொறியியல் தொழில்நுட்பம், உயிர் முறைமைகள், தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரைகளும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (C/096)

PEARSON BTEC
HND
கற்கை நெறிகளுக்கு கல்வியாண்டு 2017 ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



IIS வழங்கும் சிறப்புச் சலுகைகள்
எதிர்வரும் கல்வியாண்டு 2017ல் HND கற்கை நெறிகளுக்கு மார்கழி 5 முதல் 31 வரை பதிவினை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் மடிக்கணினி (Laptop)/ Sumsung Tab ஒன்று இலவசமாக வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு
071 777 5666
இன்றே அழைப்பினை ஏற்படுத்தி உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்
CIVIL ENGINEERING
SOFTWARE ENGINEERING
BUSINESS MANAGEMENT
IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி.
IIS CITY CAMPUS
200,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8060 | 021 4900 900
info@iis.edu.lk iis@iis.lk
www.iis.edu.lk (C/099)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600

## தீர்வு முயற்சி நீடித்தால் மட்டுமே நல்லாட்சி அரசின் ஆயுளும் நீடிக்கும்

"2015 ஜனவரியில் ஜனாதிபதி தேர்தல் நடந்தபோது நாம் எல்லோரும் எதிர்பார்க்காத அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட்டது. அது பலருக்கும் அதிர்ச்சி தரக்கூடிய ஒரு மாற்றமாக அமைந்தது." - இவ்வாறு திருகோணமலையில் தமது தமிழரசுக்கட்சியின் மாவட்ட மட்ட உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்திய அந்தத் தேர்தல் முடிவு தான் இந்த நாட்டின் பல புதிய அரசியல் விநோதங்களுக்கு - போக்குகளுக்கு - வழி சமைத்தது.

புதிய ஜனாதிபதி பதவி ஏற்றதும் அதுவரை எதிரணியில் இருந்த ஐ.தே.கட்சி, ஜனாதிபதியின் ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் சேர்ந்து விநோதக் கூட்டு ஏற்படுத்தி, நூறு நாள் வேலைத்திட்டம் என்ற ஏற்பாட்டுடன் அரசமைத்து ஆட்சிக்கு வந்தது.

அடுத்த எட்டு மாதத்தின் பின்னர் நடந்த பொதுத் தேர்தலில் பழையபடி எதிரெதிர் அணியில் நின்று வாக்குச் சமர் புரிந்த அந்த இரு கட்சிகளும், தேர்தல் முடிந்த கையோடு மீண்டும் ஒரு கூட்டமைத்து 'நல்லாட்சி அரசு' என்ற பெயருடன் அதிகாரத்துக்கு வந்துள்ளன.

முதலில் இரண்டு வருட கூட்டு என்றார்கள். பின்னர் அந்த நாடாளுமன்றத்தின் முழு ஆட்சிக் காலமும் - ஐந்து வருடங்களும் - ஆட்சி தொடருவது உறுதி என்றார்கள்.

அந்த நல்லாட்சி அரசுக்கு வெளியில் இருந்து முட்டுக் கொடுக்கும் மூன்றாவது தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிர்க்கட்சி தலைவர் பதவியைப் பெறுவதற்கான வாய்ப்பையும் அந்த ஜனாதிபதி தேர்தலின் முடிவால் ஏற்பட்ட விளைவுகளே தந்தன.

'பெயருக்குத்தான் எதிர்க்கட்சி. நல்லாட்சி அரசு நடத்தும் எல்லாக் கைங்கரியங்களுக்கும் தலையாட்டி சமாளிப்பதுதான் - எதிர்க்காமல் அமுக்கி வாசிப்பது தான்- எதிர்க்கட்சிகளுக்கான புதிய அரசியல் கலாசாரமோ' என்று கருதும் அளவுக்கு விநோத அரசியல் கலாசாரம் இந் நாட்டில் ஏற்படுவதற்கும் அதே ஜனாதிபதி தேர்தல் முடிவால் ஏற்பட்ட விளைவுகளே காரணமாயின. அதனை மறுப்பதற்கில்லை.

ஆளும் கூட்டமைப்பில் உள்ள பிரதான கூட்டணி ஒன்றின் எம்.பிக்கள் சிலர் சட்ட ரீதியாக ஆளும் தரப்பினராக இருந்து கொண்டு, தங்களுக்குள் பிறிதொரு கூட்டமைப்பை உருவாக்கி, தங்களை 'கூட்டு எதிரணி' என்று நாமம் பொறித்துக் கொண்டு செயற்படவும் -

மறுபுறத்தில் அரசுக்கு வெளியில் இருந்து கொண்டு, அரசின் வரவு-செலவுத்திட்டம் உட்பட பல விடயங்களில் அரசுக்கு முண்டு கொடுத்து முழு அளவில் ஆதரவு வழங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தன்னை பிரதான எதிர்க்கட்சி என்று பிரகடனப்படுத்திக் கொண்டு, எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் வைத்துக் கொண்டு, அந்த பதவிச் சுகத்தில் தொடர்வதுமான அரசியல் விநோதத்துக்கும் கூட - இந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுகளே வழி செய்தன.

இந்த அரசியல் விநோதங்கள் எல்லாம் அந்த ஜனாதிபதி தேர்தல் முடிவை அடுத்து கட்டவிழ்வதற்கும் பின்புலத்தில் ஒரு மைய விடயத்தைத்தான் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எல்லாம் முன்னிறுத்தி நிற்கின்றன.

அது தான் நாட்டில் நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்கு நிரந்தரமானதும், நியாயமானதும், நீடித்து, நிலைப்பதுமான ஓர் அரசியல் தீர்வை உள்ளடக்கியதான புதிய அரசமைப்பை உருவாக்குவதற்குரிய முயற்சி என்ற நிலைப்பாடு.

ஆனால், அந்த மூலவிடயம்-தீர்வுக்கான உடன்பாட்டை உருவாக்கி, அதை உள்ளடக்கியதான புதிய அரசமைப்பை ஏற்படுத்துதல் என்ற பிரதான விவகாரம் - சிக்கலுக்குள் சிக்கும் நிலைமையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதுதான் பிந்திய கள நிலைமை ஆகும்.

வடக்கு, கிழக்கு இணைந்து சமஷ்டி தீர்வுதான் ஒரே வழி என்று உறுதியாய் நிற்கின்றது தமிழர் தரப்பு. ஆனால் -

"சமஷ்டியும் இல்லை, இணைப்பும் இல்லை. ஒற்றையாட்சி தான்"- என்று ஆளும் கட்சியின் பிரமுகர்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றனர்.

கடந்த ஒரு வாரத்துக்குள் 'நல்லாட்சி' அரசின் பிரதான அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, நிமால் சிறிபால டி சில்வா, அஜித் பெரேரா மற்றும் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் இந்த விடயத்தை வலியுறுத்தி - அடித்து - கூறியிருக்கின்றனர்.

அவர்களில் லக்ஷ்மன் கிரியெல்ல ஆளும் ஐ.தே.கட்சியைத் சேர்ந்தவர். மற்றைய மூவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

இந்த நான்கு அமைச்சர்களின் நிலைப்பாட்டையும் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்க் கூட்டமைப்பு ஏற்கமாட்டாது என்பது உறுதியான ஒன்று.

ஆக, தீர்வுக்கான முன்நகர்வு இப்போது தீர்க்கமான ஒரு கட்டத்தில், முட்டுச் சந்துக்குள் வந்து முடங்குவது போன்ற ஒரு சூழல் உருவாகி வருகின்றது.

இந்நெருக்கடியைத் தாண்டினால் மட்டுமே இந்த விநோதக் கூட்டும், அதில் தொங்கிக் கொண்டிருக்கும் நல்லாட்சி அரசும் தொடர முடியும்.

தீர்வு முயற்சி தடைப்பட்டு, குழம்பினால் நல்லாட்சி அரசுக்கான விநோதக் கூட்டும் உயிர்விடுவது தவிர்க்க முடியாத காரியமாகவே முடியும்!

# எந்த நிதி நெருக்கடியையும் எதிர்கொள்ள நாங்கள் தயார்

## மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.01

எந்தவொரு நிதி நெருக்கடியையும் எதிர்கொள்ளும் வல்லமையைக் கொண்டுள்ளது இலங்கை மத்திய வங்கி என்று வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமார சுவாமி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசாங்கத்தின் வருமானம் இந்த வருடத்தில் முதல் ஒன்பது மாத காலத்தில் 9.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

மத்திய வங்கியின் செயற்பாடுகள் குறித்து மக்கள் மத்தியில் தற்போது நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாத காலத்தில் அரசாங்கத்தின் வருமானம் 9.6 சதவீதத்ததால் அதிகரித்துள்ளது. வற் உள்ளிட்ட புதிய வரிகள் நடைமுறைப்படுத்தப்பட்டமையே இதற்குக் காரணம்.

மத்திய வங்கி அரசியல் மயப் படுத்தப்பட்டுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

அத்துடன் மத்திய வங்கி ஆளுநராகக் கடமையாற்றி வரும் காலப் பகுதியில் இவ்வாறான அரசியல் மயப்படுத்தல்களை அவதானிக்க முடியவில்லை.

அண்மையில் நிதி அமைச்சர் மத்திய வங்கி அரசியல் மயப்படுத்தப் பட்டுள்ளதாகக் கூறியிருந்த போதிலும் அவ்வாறு அரசியல் மயப்படுத்தப் படவில்லை. பொருளாதாரத்



தீர்மானங்களை எடுக்கும் செயற்பாடுகளே அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 60, 70 ஆண்டுகளாக நாட்டின் பொருளாதாரத் தீர்மானங்களை எடுக்கும் நடவடிக்கையானது கடுமையான அரசியல் மயப்படுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளது. இதுவே நாம் எதிர்நோக்கி வரும் பிரதான சவாலாகும்.

ஒட்டுமொத்த பொருளாதார செயன்முறையும் சுயாதீனமான முறையில் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய வேண்டும் -என்றார். (எ)

# இ.போ.ச.சாரதிகளின் விடுமுறைகள் ரத்து

## போக்குவரத்து அமைச்சு அதிரடி

கொழும்பு, டிசெ.01

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் பணியாற்றும் சகல சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான விடுமுறைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

அரசால் முன்வைக்கப்பட்டுள்ள 7 போக்குவரத்துக் குற்றச்சாட்டுக்ளுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தனியார் பஸ் ஊழியர்கள் இன்று முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, அவர்களது விடுமுறை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி, கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளமையால், அவர்களது பரீட்சைக்குத் தடையாக இருக்க வேண்டாம் என்றும் இதற்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும் என்றும் இலங்கை அதிபர்கள் சங்கம் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மிக உயரமான கட்டடங்களால் பூமியின் சமநிலைக்கு ஆபத்து

கொழும்பு, டிசெ.01

உலகில் வளர்ச்சியடைந்த நகரங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மிகப்பெரிய உயரமான கட்டடங்கள் பூமியின் சம நிலைக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன என்று இரகசிய அறிக்கை ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின் சன்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள மிகப் பெரிய கட்டடங்கள் தொடர்பாக செய்மதி மூலம் மேற்கொண்ட கணக்கெடுப்பில் இது தெரியவந்துள்ளது.


2009 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட சன்பிரான் சிஸ்கோ மிலேனியம் கோபுரம் ஒரு அடியும் 4 அங்குலமும் பூமிக்குள் இறங்கியுள்ளது.

மேலும் பல பெரிய கட்டடங்கள் இவ்வாறு பூமிக்குள் இறங்கி வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 350 மில்லியன் டொலர் செலவில் இந்தப் பெரிய ஆடம்பரக் கட்டடம் கட்டப்பட்டது.

கட்டடம் படிப்படியாக பூமிக்குள் இறங்கி வருவதாக டோர் மற்றும் செய்மதிப் படங்கள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், ஆபத்தான கட்டடங்களை வகைப்படுத்த ஆய்வாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

# இ.போ.சவுக்கு 1000 பஸ்கள்



கொழும்பு, டிசெ.01

இலங்கை போக்குவரத்துச் சபையின் தேவைக்காக ஆயிரம் பஸ்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40-46 பயணிகள் செல்லக்கூடிய இரண்டு பக்கங்களிலும் 2 ஆசனங்கள் அடங்கிய பஸ்களே இவ்வாறு கொள்வனவு செய்யப்படவுள்ளன.

ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட பஸ்களைத் திருத்துவதற்கான செலவீனம் அதிகரித்துள்ளமையால், புதிய பஸ்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

**நாளை**

02.12.2016
வெள்ளிக்கிழமை
திதி: திருதியை முன்னிரவு 10.48 வரை
நட்சத்திரம்: பூராடம் முழுவதும்
சுபநேரம் 6.15 – 7.45
இராகுகாலம் 10.45 – 12.15

JSAC

பெண்களுக்கெதிரான
வன்முறை ஒழிப்பு செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
ஆணோ, பெண்ணோ அவர்களை ஆரோக்கியமாக பெற்றெடுப்பவள் பெண். அவளின் ஆரோக்கியம் குடும்பத்தினை மட்டுமல்ல சமூகத்தினையும் வலுவூட்டும்.
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

16
2016

காலைக்கதிர் Kalaikkathir



# குளமாகிவிட்டது மருதம் பூங்கா செலவழித்த பல இலட்சம் வீண்




வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சினால் வருடந்தோறும் நடத்தி வருகின்ற மரநடுகை செயற்றிட்டம் –2016 கிளிநொச்சியில் கடந்த நவம்பர் முதலாம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்திற்கான இந்த நிகழ்வு கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்திக்கு அருகில் உள்ள இரணைமடு இடது கரை வாய்க்காலின் அருகில் காணப்படுகின்ற ஒதுக்கீட்டு நிலத்தில் இடம் பெற்றது.

பிரமாண்டமாக ஒழுங்கு செய்யப்பட்டு பல இலட்சங்கள் செலவு செய்து நிகழ்வு நடத்தப்பட்டது. வடக்கு மாகாண முதலமைச்சர் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு மரங்களை நட்டு வைத்தார். இதனை தவிர அங்கு கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவரும் குறித்த இடத்தில் மரங்களை நட்டனர். ஆனால் தற்போது பெய்த மழை காரணமாக அந்த இடம் சிறு குளம் போன்று காட்சி அளிப்பதோடு நடப்பட்ட மரங்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன.

மருதம் மரங்களின் மாதிரி பூங்காவுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள இடத்தில் குளம் போன்று நீர் இன்னும் ஒரு சில மாதங்களுக்கு காணப்படும் என்று குறிப்பிடும் மக்கள், மழைக்காலத்தில் மரம் நடுவதற்காக மாகாண சபையால் தெரிவு செய்யப்பட்ட இந்த இடம் பொருத்தமற்றது என்றும் தெரிவிக்கின்றனர்.

மருத மரங்களின் மாதிரி பூங்கா உருவாக்கும் வகையில் மருதம் எனும் பெயரில் குறித்த இடம் தெரிவு செய்யப்பட்டது. ஆனால் தெரிவு செய்யப்பட்ட இடம் பொருத்தமற்றது என்றும் அங்கு மரங்களை நட்டு வளர்க்கும் காலம் இதுவல்ல எனவும் இதற்கான செலவு செய்த பணம் நீரில் கரைந்தது போன்று போய்விட்டது என்றும் பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர். (இ-70)




## வாகன உரிமை பெயர் மாற்றம்; சலுகைக் காலம் ஜன.01 வரை நீடிப்பு

வாகனங்களின் உரிமையைத் தமது பெயருக்கு மாற்றிக் கொள்ள வழங்கப்பட்டிருந்த சலுகைக் காலம் எதிர்வரும் ஜனவரி மாதம் 1ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரமொன்றைப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார். நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது வாகனங்களின் உரிமையை உறுதி செய்து கொள்ளாது வாகனம் வைத்திருப்பவர்கள் சட்ட ரீதியாக உரிமையைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் வழங்கியிருந்த சலுகைக் காலத்தை நீடிக்க இணங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக நவம்பர் 30ஆம் திகதி (நேற்றுடன்) இந்த சலுகைக் காலம் முடிவடையும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பெரும் எண்ணிக்கையானவர்கள் வாகன உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக காத்திருப்பதனால் கால அவகாசத்தை நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## தாழமுக்கம் சூறாவளியாக வலுவடைகிறது; வடக்கில் மழை பெய்யும் சாத்தியம்

திருகோணமலையிலிருந்து 480 கிலோமீற்றர் தொலைவில் வங்களாவிரிகுடாவின் தென்மேற்குப் பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் சூறாவழியாக வலுவடைந்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அடுத்த 12மணித்தியாலங்களில் தாழமுக்கம் சூறாவளியாக வலுப்பெற்று வட மேல் திசையில் யாழ்.குடா நாட்டை அண்மித்து நகர்வதற்கான சாத்தியம் உள்ளதாக திணைக்களம் விடுத்துள்ள வானிலை முன்னறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று நள்ளிரவு அளவில் சூறாவளி தமிழகத்தை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாழமுக்கத்தின் விளைவாக நாளை 2 ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் கடும் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கடற்பரப்பிலும் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

மன்னாரில் இருந்து காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்கரைக்கு அப்பாலுள்ள கடற்பரப்புகளில் அவ்வப்போது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-2)

# மன்னார் விவசாயிகளின் தேவை கருதி திறந்துவிடப்பட்டது கட்டுக்கரைக்குளம்

## முருங்கன் நீர்ப்பாசன பொறியியலாளர் தகவல்

மன்னார்,டிசெ.01

மன்னார் கட்டுக்கரைக் குளத்தில் நடப்பு வருட கால போகத்துக்கான நீர்மட்டம் போதியளவு இல்லாதபோதும் விவசாயிகள் தக்க காலத்தில் தங்கள் விவசாய நெற்செய்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக மழையையும் உள்வாங்கப்படும் நீரை நம்பியும் கட்டுக்கரைக் குளத்திலிருந்து விவசாயத்துக்கு நீர் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முருங்கன் நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.செல்வகாந்தன் தெரிவித்தார்.

மன்னாரில் பிரதான குளமான கட்டுக்கரைக் குளத்தின் கீழ் 2016/2017 ஆம் ஆண்டுக்கான காலபோகம் சம்பந்தமான விவசாயக் கூட்டம் அண்மையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் 4, 41/2 மாத நெல் 21.11.2016 முன்னும் 3, 3 1/2 மாத நெல் 30.11.2016 க்கு முன்பும் 2, 2 1/2 மாத நெல் இனம் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பும் விதைக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால் மன்னாரில் பருவ மழை தக்க காலத்தில் பொய்த்தமையால் மன்னார் விவசாயிகள் மேற்குறிப்பிட்ட காலத்தில் தங்கள் விவசாய நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் மன்னாரில் பரவலாக சற்று மழை பெய்தபோதும் இந்த மழை நீர் இப்பகுதி விவசாயிகளுக்கு நெற் செய்கையை தொடர்வதற்கான மழையாக காணப்படாததால் மன்னார் விவசாயிகள் நெற் செய்கையை தொடர சற்றுத் தயக்கம் காட்டி வந்தனர்.

கட்டுக்கரைக் குளத்தில் 9 அடியாக நீர் இருக்கின்றபோதும் மழைமானியில் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி காணப்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு போதிய நீரை விநியோகிக்க முடியும் என இது சம்பந்தமான விவசாயக் கூட்டத்தின் போது நீர்ப்பாசன பொறியியலாளர் கருத்து தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதும் மன்னாரில் இன்னும் சரியான முறையில் மழை வீழ்ச்சி காணப்படாத போதும் கட்டுக்கரைக் குளத்தில் தற்பொழுது 7.7 அடி அதாவது பதினாறாயிரத்து 500 சதுர ஏக்கர் அடி நீர் மட்டமே காணப்படுகின்றபோதும் கட்டுக்கரைக்குளத்துக்குள் உள்வாங்கப்படும் நீரை நம்பியும் விவசாயிகள் காலம் தாழ்த்தி நெற் செய்கையை ஆரம்பித்தால் பாதிப்பு அடையலாம் என கருத்திற்கொண்டு கடந்த 25ஆம்திகதி முதல் மட்டுப்படுத்தப்பட்ட முறையில் கட்டுக்கரைக் குளத்திலிருந்து நீர் திறந்து விடப்பட்டிருப்பதாக இதன் நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.செல்வகாந்தன் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து தற்பொழுது அதிகமான விவசாயிகள் தங்கள் காலபோக நெற்செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கட்டுக்கரைக் குளத் திட்டத்தின் கீழ் இவ் நடப்பாண்டு காலபோகத்துக்கு இருபத்து நாலாயிரத்து438 ஏக்கரில் விவசாயம் செய்கைப் பண்ணப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-112)

## வவுனியா உணவகம் ஒன்றில் காஸ் சிலிண்டர் வெடித்தது!

வவுனியா,டிசெ.01

வவுனியா நகரப்பகுதியில் உள்ள சைவ உணவகம் ஒன்றில் நேற்று முன்தினம் மதியம் காஸ் சிலிண்டர் வெடித்துத் தீ பரவியது.

உடனடியாக குறித்த உணவகத்தில் பணிபுரிந்தவர்கள் மற்றும் பொலிஸாரின் முயற்சியால் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. குறித்த உணவகத்தின் சமையல் வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போதே காஸ் சிலிண்டர் மூலம் காஸ் வெளியேறி விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டமையால் பெரியளவிலான இழப்புக்கள் தடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-100)



அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு டாக்டர் ஜமால்தீன் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு மற்றும் பாராட்டு விழா கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.
பாடசாலை அதிபர் ஏ.எல்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முஹமட் நஸீர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.
இதில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## யானை தாக்கி குடும்பஸ்தர் சாவு

அம்பாறை தங்கவேலாயுதபுரத்தில் காட்டு யானை தாக்கி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருக்கோவிலைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தை (வயது 53) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

வயல் காவலுக்குச் செல்லும் போதே குறித்த நபர் யானைத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச)

## கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து தண்டம் அறவிடும் நடவடிக்கை

கல்முனை, டிசெ.01

கல்முனை மாநகர சபைக் குட்பட்ட பிரதேசங்களில் திரியும் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து தண்டம் அறவிடும் நடவடிக்கை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மீண்டும் முன்னெடுக்கப் படவுள்ளது என்று மாநகர சபை ஆணையாளர் கே.லியாகத் அலி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் பிரதான வீதிகள் சந்தை மற்றும் பாடசாலைகள் போன்ற பொது இடங்களில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இப் பாதையில் பயணிக்கும் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். விபத்துக்கள் ஏற்படவும் இதுவே காரணமாக இருக்கின்றது.

கல்முனை நகரை அழகுபடுத்தும் வேலைத் திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இவ்வாறான கட்டாக்காலி மாடுகள் நகரை அசுத்தப்படுத்தி வருகின்றன.

இவற்றைக்கருத்திற்கொண்டு கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான மாடுகளைப் பிடித்து அதன் உரிமையாளர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்படும்.

தண்டப்பணம் அறவிட்ட பின்னர் விடுவிக்கப்படும் மாடுகளை தமது சொந்த இடங்களில் வைத்துப் பராமரிக்கத் தவறும் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## இன மோதலைத் தூண்டி விடுவதற்கு முயற்சிக்கின்றனர் பௌத்த துறவிகள்

### கிழக்கு மாகாணசபை அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர்



சமாதானத்தையும் இன ஐக்கியத்தையும் ஏற்படுத்த வேண்டிய பௌத்த மதத்தலைவர்கள் சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு சிறுபான்மை மக்களுக்கு எதிராக போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து இன மோதல்களை தோற்றுவிக்க முனைகின்றனர். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னரும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாதக் குழுக்களின் செயற்பாடுகள் ஓயவில்லை - இவ்வாறு கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் 66ஆவது அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தவிசாளர் சந்திரதாச கலப்பதி தலைமையில் நடைபெற்றது.

இதன் போது கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான சிப்லி பாறூக், கிருஷ்ணபிள்ளை ஆகியோரினால் நமது நாட்டில் சமாதானத்தையும், சகவாழ்வையும் ஏற்படுத்தும் முகமாக கொண்டுவரப்பட்ட ஆட்சியில் இனவாத செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என சமர்ப்பிக்கப்பட்ட அவசரப் பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே உதுமாலெப்பை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நமது நாட்டில் கடந்த ஆட்சிக் காலத்தில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராக அதிகாரத்தில் இருந்தவர்கள் நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தினால் இந்நாட்டில் வாழும் சிறுபான்மை மக்கள் குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து ஆட்சி மாற்றத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்தனர்.

ஆட்சி மாற்றத்தின் பின் இந்நாட்டில் சிறுபான்மை மக்கள் தங்களது மத உரிமைகளுடன் சந்தோசமாக வாழமுடியும் என்ற பெரும் எதிர்பார்ப்புடன் இருந்தனர். ஆனால், ஆளுங் கட்சியில் இருக்கின்ற அமைச்சர்கள் சிலர் பகிரங்கமாகவே முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான இனவாதக் கருத்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

நாட்டின் பெறுப்பு வாய்ந்த நீதியமைச்சர் 32 முஸ்லிம்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் இணைந்து செயற்படுகின்றனர் என்று நாடாளுமன்றத்தில் பேசியுள்ளார். அதேபோன்று மாணிக்கமடு பௌத்த சிலை வைப்பு விவகாரத்தில் அம்பாறை மாவட்டத்தில் சிறுபான்மை மக்களின் 30 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற அமைச்சர் தயாகமகே கல்முனை தொடக்கம் பொத்துவில் வரையிலான கரையோரப் பிரதேச 12 ஆயிரம் ஏக்கர் காணிகள் தீகவாபி விகாரைக்குட்பட்டது என்று தெரிவித்தார். இந்நிலையில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மாகாண சபைகளுக்கு எந்த அதிகாரங்களும் வழங்கப்படக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான இனவாத அமைச்சர்களின் கருத்துக்கள் இனவாத குழுக்களுக்கு உற்சாகம் ஊட்டுவதாகவே அமைந்துள்ளன. கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகளின் போது முஸ்லிம் சமூகம் பல இழப்புக்களைச் சந்தித்தும் கூட பொறுமை காத்துவந்தது. குறிப்பாக இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மை தலைவர்களோடும், பெரும்பான்மை சமூகத்தோடும் ஐக்கியமாகவே வாழ்ந்து வந்துள்ளனர்.

சமூகங்களுக்கிடையில் காணப்படும் பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்பட வேண்டும் மாறாக பௌத்த மதத் தலைவர்கள் சட்டத்தை கையில் எடுப்பதை இந்த அரசு தடுத்து நிறுத்த வேண்டும். - என்றார்.

## மகளை அடித்துக் கொன்ற தாய்க்கு விளக்க மறியல் நீடிப்பு

அம்பாறை மத்திய முகாம் பகுதியில் மகளை அடித்துக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட தாயாரை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நிதிமன்ற நீதிவான் ஐ.பயாஸ்தஸாக் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

வளர்ப்பு மகளான செவ்வநாயகம் ஜனனி (வயது 21) என்பவரை அடித்துக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் தாய் (வயது 55) கைது செய்யப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டார்.

கடந்த மே மாதம் மதம் மாறியமை தொடர்பில் தாய்க்கும் மகளுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்தே தாய் கட்டில் சட்டத்தால் மகளைத் தாக்கியுள்ளார். இந்நிலையில் மகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதனைத் தொடர்ந்து சடலத்தை வீட்டின் பின்புறத்தில் தாய் புதைத்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஏறாவூர் இரட்டைக் கொலை சம்பவம்: அறுவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, டிசெ.01

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அறுவரையும் எதிர்வரும் டிசம்பர் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக மாவட்ட நீதிபதி முஹமட் றிஷ்வி உத்தரவிட்டுள்ளார்.

ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் நேற்று புதன் கிழமை சந்தேக நபர்கள் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையிலே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர்பிரதேசத்தில் முகாந்திரம் வீதியைச் சேர்ந்த நூர்




முஹம்மது உசைர் (வயது 56) அவரது திருமணமான மகளான ஜெனீரா பானு (வயது 32) ஆகியோரே படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அறுவருக்குமே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

## மரக்குற்றிகள் ஏற்றி வந்த லொறியுடன் சாரதி கைது



மட்டக்களப்பு, டிசெ.01

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிரான் பகுதியில் சட்ட விரோதமாக மரக்குற்றிகள் ஏற்றி வந்த லொறியுடன் அதன் சாரதி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மீன் கொண்டு செல்லும் பாணியில் குளிரூட்டப்பட்ட லொறியில் மறைத்துக் கொண்டு சென்ற தேக்கு மரக்குற்றிகளே கைப்பற்றப்பட்டன.

## விபத்தில் வர்த்தகர் பலி



மட்டக்களப்பு, டிசெ.01

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டமாவடி பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்தார்.

ஓட்டமாவடியைச் சேர்ந்த ஹனிபா மபாஸ் (வயது 30) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.


வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் ரக வாகனத்தின் பின்னால் சென்ற வான் மோதியதாலே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# பிள்ளையான் தொடர்ந்தும் கூண்டுக்குள்!

கொழும்பு, டிசெ.01
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிள்ளையான் உட்பட 4 பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் நேற்று நால்வரும் ஆஜர் படுத்தப்பட்டனர்.

அதையடுத்தே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.




கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல் ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கடந்த 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் கடந்த 2015 ஆண்டு ஒக்ரோபர் மாதம் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் எதிர்வரும் டிசெம்பர் 14ஆம் திகதி வரை 4 பேரினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ஜனாதிபதிக்கு அமெரிக்க தளபதி வழங்கியுள்ள உறுதிமொழி



கொழும்பு, டிசெ.01
இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த, அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் தளபதி அட்மிரல் ஹரி ஹரிஸ் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

காலி கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக, மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த 28ஆம்திகதி கொழும்பு வந்த அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் தளபதி அட்மிரல் ஹரி ஹரிஸ், நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது, இலங்கையுடனான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதில் அமெரிக்கா உறுதிபூண்டுள்ளதாகவும், பசுபிக் கட்டளைப் பீடமும் இதில் இணைந்து கொள்வதாகவும், ஜனாதிபதியிடம் அட்மிரல் ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், மற்றும் முப்படைகளின் தளபதிகளையும், அட்மிரல் ஹரிஸ் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பெல்ஜியம் இளவரசர் - ரணில் சந்திப்பால் ஏற்பட்ட சர்ச்சை!



கொழும்பு, டிசெ.01
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - பெல்ஜியம் இளவரசர் லோறன்ட் இடையே நடந்த சந்திப்பு நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பெல்ஜியம் நாட்டின் நடைமுறைகளைப் பின்பற்றாமல் இந்தச் சந்திப்பு இடம் பெற்றதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

கடந்த மாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெல்ஜியத்துக்கு மேற்கொண்ட விஜயத்தின் போதே, அந்த நாட்டின் இளவரசர் லோறன்டை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக பெல்ஜியம் நாட்டின் வெளிவிவகார அமைச்சுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்படவில்லை. சந்திப்பு நடந்த பின்னரே, பெல்ஜியம் வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத் தப்பட்டுள்ளது. இது அந்த நாட்டின் சட்ட திட்டங்களை மீறிய செயல் என்று சர்ச்சைகள் எழுந்துள்ளன.

# பேரணியின்போது 6 மாணவர் காயம்!

கொழும்பு, டிசெ.01
பத்தரமுல்ல பொல்துாவ பாலமருகே தங்களின் பேரணியை கலைக்க பொலிஸார் முயன்ற சந்தர்ப்பத்தில் 6 மாணவர்கள் காயமடைந்துள்ளனர் என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வரவு -செலவுத் திட்டம் மற்றும் சைட்டம் நிறுவனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தே நேற்று இந்த பேரணியை ஏற்பாடு செய்திருந்ததாக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் லஹிரு வீரசேகர தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலில் 6 பேர் காயமடைந்துள்ளனர் என்றும், அதில் 3 பேர் தேசிய வைத்திய சாலையிலும் 3 பேர் ஜயவர்தனபுர வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறியுள்ளார்.

காயமடைந்தவர்களில் இருவருக்கு தலையில் காயங்கள்



ஏற்பட்டுள்ளமையினால் அவர்கள் சத்திரசிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பொல்துாவ பாலத்திற்கு அருகில் வீதி தடைகளை தாண்டி மாணவர்கள் பேரணியை முன்னெடுத்தனர்.

இதனால், அவர்களை கலைப்பதற்கு கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்டோம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

# ஐ.எஸ். அமைப்பு குறித்து 'றோ' எச்சரிக்கவில்லை

## பாதுகாப்புச் செயலர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ.01
இலங்கையர்கள் ஐ.எஸ். அமைப்பில் இணைந்து கொண்டமை தொடர்பாக, இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ' எந்த எச்சரிக்கை அறிக்கையையும் வழங்கவில்லை என்று பாதுகாப்புச் செயலர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதுகுறித்து எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-



சிரியாவிலோ, ஈராக்கிலோ செயற்படும் ஐ.எஸ். அமைப்பில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் இணைந்து கொண்டமை தொடர்பான எந்த தகவலையும் 'றோ' வழங்கவில்லை.

இருந்தாலும், ஐ.எஸ். அமைப்பின் நடவடிக்கைகள் குறித்து, புலனாய்வு அமைப்புகள் அதிகபட்ச விழிப்பு நிலையில் இருக்கின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த நன்றாகப் படித்த குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர், ஐ.எஸ். அமைப்பில் இணைந்து கொண்டுள்ளனர் என்று அண்மையில் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தகவல் வெளியிட்டிருந்தார்.

அவரது இந்தக் கருத்துக்கு முஸ்லிம்கள் பலத்த எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

காலைக்கதிர் Kalaikkathir



# சிறைக் கைதிகளுக்கு தொற்றுநோய் அபாயம்

கொழும்பு, டிசெ.01

சிறைக் கைதிகளின் மத்தியில் தொற்றுநோய்கள் ஏற்படக்கூடிய அபாயநிலை ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இடப்பற்றாக் குறை காரணமாக கைதிகளுக்குப் போதியளவு இடவசதிகள் இல்லை. இதனால் தொற்று நோய்கள் கைதிகள் மத்தியில் பரவி வருகின்றன என்று மருத்துவ பரிசோதனைகளின் மூலம் தெரியவந்துள்ளது. சிறைச்சாலைகளில் மிகவும் அதிக எண்ணிக்கையிலான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால், காச நோய் மற்றும் குஷ்ட நோய் போன்றவற்றால் அதிகளவில் கைதிகள் பாதிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை, நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளினதும் அதிகாரிகள் மற்றும் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கும் காசநோய் தொடர்பிலான பரிசோதனை நடத்தப்பட்டு வருகின்றது.

மருத்துவர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், தாதியர் உள்ளிட்டவர்களின் பங்களிப்புடன் இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டு வருவதாக தேசிய காச நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் காந்தி ஆரியரட்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# லஞ்ச, ஊழல் விவகாரம்: ௮,000 முறைப்பாடுகள்

கொழும்பு, டிசெ.01

லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவுக்கு, லஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய 8 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனினும், மூவாயிரத்து 264 முறைப்பாடுகள் தொடர்பிலேயே, ஆணைக் குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது என்று ஆணைக்குழுவின் தலைவர் நெவில் குருகே தெரிவித்தார்.

நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சால், ஊடகவியலாளர்களுக்காக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட, லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது ஆணைக்குழுவுக்கு, லஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய 8 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனினும் எமது ஆணைக்குழுவுடன் தொடர்புடைய மூவாயிரத்து 264 முறைப்பாடுகள் தொடர்பிலேயே நாம் விசாரணையை முன்னெடுத்து வருகின்றோம்.

எமது ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு அமைய, ஒவ்வொரு விசாரணைகளை முன்னெடுப்பதற்கு 431 அதிகாரிகளை நியமிப்பதற்கான தேவை உள்ளது.

எனினும், தற்போது எம்மிடம் 196 அதிகாரிகளே கடமையாற்றி வருகின்றனர். அதிலும், சில அதிகாரிகள், மற்றைய சில விசாரணைகளுக்காக சென்று விட்டால், 150 அதிகாரிகளே கடமையில் ஈடுபட்டிருப்பர்.-என்றார். (ன்)

# கற்பிட்டியில் கஞ்சா மீட்பு

புத்தளம், டிசெ.01

கற்பிட்டி-கந்தகுலியப் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் 25 கிலோ கிராம் கேரள கஞ்சாவைப் புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அந்தத் தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே இவை கைப்பற்றப் பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி 50 லட்சம் ரூபா என்று மதிப்பிடப் பட்டுள்ளது. சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# கல்வியியற் கல்லூரி மாணவருக்கான கொடுப்பனவு 2017 இல் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.01

கல்வியியல் கல்லூரிகளில் கற்கும் மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் அடுத்த வருடம் முதல் அதிகரிக்கப்படவுள்ளன என்று கல்வியியல் கல்லூரிகளுக்கான பிரதம ஆணையாளர் கே.எம்.எச்.பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மூவாயிரத்து 500 ரூபா கொடுப்பனவு நான்காயிரம் ரூபா வரையும், நான்காயிரம் ரூபா கொடுப்பனவு ஐயாயிரம் ரூபா வரையும் அதிகரிக்கப்பட உள்ளது.

இறுதி ஆண்டு மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் ஐயாயிரம் ரூபாவிலிருந்து ஆறாயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட உள்ளது.

அடுத்த வருடம் 19 கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சிக்கென நான்காயிரத்து 65 பேர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

2014ஆம் ஆண்டு வெளியான உயர் தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய அவர்கள் இணைத்துக் கொள்ளப்படுகிறார்கள்.- என்றார்.

நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது. புதிய மாணவர்கள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் கல்வியியல் கல்லூரிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# குருநாகலில் விவசாய வலயம்

குருநாகல், டிசெ.01

குருநாகல் மாவட்டத்தில் விவசாய வலயம் ஒன்றை எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் அமைக்க திட்டமிட்டுள்ளதாக ஆரம்ப கைத்தொழில் அமைச்சர் தயாரகமகே தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட இறுதிக்குள் அன்னாசி உற்பத்திக்கான புதிய 8 திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2020ஆம் ஆண்டளவில் 20ஆயிரம் ஏக்கரில் அன்னாசிச் செய்கையை மேற்கொள்வதற்கு எதிர் பார்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பெருமளவிலான ஏற்றுமதி வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (எ)

## தினசரி ராசி பலன் 01.12.2016

சுபநேரம் : காலை : 10.30 - 11.30

ராகு காலம் : 1.30 - 3.00
குளிகன் : 9.00 - 10.30
எமகண்டம் : 6.00 - 7.30

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சமநோக்கு நாள்

**மேஷம்** : புகழ் - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து புகழ் நல்கும் நாள்.

**ரிஷபம்** : ஆர்வம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் செய்யும் செயல்களில் கூடுதல் ஈடுபாட்டுடன் வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள்.
சந்திராஷ்டமம்: மிருகசீருஷம் 1,2ஆம் பாதங்கள்.

**மிதுனம்** :மேன்மை -இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் எதிர்பாராத வரவால் மேன்மை அடையும் நாள்.
சந்திராஷ்டமம்: மிருகசீருஷம் 3,4ஆம் பாதங்கள்

**கடகம்** : பாசம் - அனைவரிடத்திலும் ஈகை கொண்டும் அன்பானவர்களின் ஆதரவும் கிடைக்கும்.

**சிம்மம்** : பெருமை - இன்று திடீர் புகழாரம் தங்கள் வாசல் நாடி வரும்.

**கன்னி** : களிப்பு - குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு களிப்படையும் நாள்.

**துலாம்**: சாதனை - சிந்திக்கும் சிந்தனைகளினால் செய்யப்படும் அனைத்துக் காரியங்களும் சாதனைகளாக மாறும்.

**விருச்சிகம்**: உயர்வு - அனைத்து காரியத்திலும் முயற்சியுடன் செயற்பட்டால் உயர்வு தரும் நாள்.

**தனுசு**: தெளிவு - மனதில் உள்ள குழப்பங்கள் நீங்கித் தெளிவு பெறுவீர்கள்.

**மகரம்**: பொறுமை - நிதானத்தைக் கடைபிடித்து நிம்மதியை நாடும் நாள்.

**கும்பம்**: சிந்தனை - இன்று உங்கள் சிந்தனைகள் சிறந்து மிளிரும், அறிவு ஒளிரும்.

**மீனம்**: நிம்மதி - வளமான வாழ்வும் அமைதியும் வாசல் கதவைத் தட்டும் நிம்மதி தரும் நாள்.

# வெளிநாட்டு நாணயம் கடத்த முயன்ற இருவர் கைது

கொழும்பு, டிசெ.01

வெளிநாட்டு நாணயங்களைக் கடத்த முற்பட்ட பாகிஸ்தான் பிரஜைகள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று விமான நிலைய சுங்கப் பிரிவு அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகர் நோக்கி நேற்று முன்தினம் செல்ல இருந்த இருவரிடம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே அவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று சுங்க ஊடகப் பேச்சாளர் தர்மசேன கஹதவ குறிப்பிட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 54 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றின் இலங்கை நாணயப் பெறுமதி 82 லட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# ஓமானில் பணயக் கைதிகளாக உள்ள இலங்கையர்களை விடுவிக்க ஏற்பாடு

கொழும்பு, டிசெ.01

ஓமானில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கையர்கள் 9 பேரை விடுவிப்பதற்கான இராஜதந்திர நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓமானில் அர்க்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு வரும் ஹூர்தி கிளர்ச்சியாளர்கள், கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் இலங்கையர்கள் உள்ளிட்ட குழுவினர் பயணித்த கப்பல் ஒன்றைத் தடுத்து வைத்துள்ளனர்.


அந்தக் கப்பலில் 9 இலங்கையர் உள்ளிட்ட 26 பேர் பயணித்துள்ளனர்.

இந்தநிலையில் குறித்த கப்பலில் பயணித்தவர்களை விடுதலை செய்வதற்கு ஹூர்தி கிளர்ச்சியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில், கப்பல் நிறுவனம் மற்றும் ஹூர்தி கிளர்ச்சியாளர்கள் ஆகியோருக்கு இடையிலான தகவல் தொடர்பு தாமதம் காரணமாக பணயக் கைதிகள் விடுதலை தாமதமடைந்து கொண்டிருக்கின்றது.

இதனையடுத்து துபாயில் அமைந்துள்ள கப்பல் கம்பனி முகாமைத்துவத்தை அங்குள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக அரசு தொடர்பு கொண்டுள்ள போதிலும் சாதகமான பதில் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று அறியக் கிடைத்துள்ளது.

எனினும் இலங்கையில் உள்ள ஓமானியத் தூதரகம் ஊடாக அந்தப் பணயக் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதற்கிடையே ஹூர்தி கிளர்ச்சியாளர்கள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் ஓமான் அரச நிர்வாகத்தில் பங்கேற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)





# உலக 17 வரலாறும் மனித விடுதலையும்

ஹண்டிங்ரனின் பார்வையில் மனித வரலாறு நாகரிகங்களின் வளர்ச்சிப் போக்குடன் பின்னிப் பிணைந்து செல்கிறது. இன முரண்பாடுகளால் எழும் உள்நாட்டு யுத்தங்களாகவும், நாகரிக மோதல்களால் எழும் உலக நெருக்கடிகளாகவும் மனத வரலாறு தொடரும் என்பது அவரது கருத்து. ஒவ்வொரு நாகரிகமும் தனக்கே உரித்தான தனித்துவப் பண்புகளைக் கொண்டிருக்கின்றமையால் நாகரிகங்கள் மத்தியில் ஒத்திசைவு ஏற்படப் போவதில்லை. அத்துடன், ஓர் உயர்நிலைப் பண்பாட்டு மையம் நோக்கி நாகரிகங்கள் வளர்ச்சி பெறப்போவதில்லை என்பதும் அவரது கருத்து. மனித குலமானது வேறுபட்ட பண்பாட்டு மையங்களாக நிரந்தரமாகப் பிளவுபட்டிக்கும் என்றும் நாகரிக மோதல்களும் பேரழிவுகளும் தவிர்க்க முடியாத வரலாற்றுப் போக்காக அமையும் என்றும் ஓர் எதிர்மறையான எதிர்காலத்தையே அவர் எதிர்வு கூறுகின்றார்.

பிளவுபட்டு நிற்கும் பண்பாட்டு உலகங்கள் மனித குலத்துக்குப் பொதுவான ஒரு பண்பாட்டு மையத்தை உருவாக்கப் போவதில்லை என்று ஹண்டிங்ரன் கருதுவது தவறு. ஏற்கெனவே ஐ.நா.சபை நிறுவனம் வாயிலாக மானிடத்துக்குப் பொதுவான பண்பாட்டு விழுமியங்கள் தொகுக்கப்பட்டு, ஐ.நாவின் சாசனங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. அடிப்படை மனித உரிமைகள், மனித சுதந்திரங்கள், அரசியல் உரிமைகள், குடியுரிமைகள், பெண்ணுரிமைகள், சிறார் உரிமைகள், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகள் போன்ற உரிமைப் பிரகடனங்களாகவும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களாவும் மானிடத்துக்குட் பொதுவான பண்பாட்டு விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு ஐ நா. செயற்பட்டு வருகின்றது. இந்த அறநெறிக் கோட்பாடுகளை ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் உலக நாடுகள் அனைத்துமே ஏற்றுக்கொண்டுள்ளன. மானிடத்துக்கான பொது விழுமியங்களை மேலும் செழுமைப்படுத்தி, விரிவுபடுத்தவும் ஐ.நா. முயன்று வருகிறது. ஒரே தார்மீக ஒழுங்கில் மனித குலத்தை ஒன்றுபடுத்தி நெறிப்படுத்த இந்த உலக நிறுவனம் ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்து வருகிறது.

மனித குலமானது நாகரிக மையங்களாகப் பிளவுபட்டு நிற்கவில்லை என்பதும் பொருளிய வளர்ச்சியின் அடிப்படையில் அதிகார மையங்களைக் (Centers of power) கொண்டதாக உலக ஒழுங்கு அமையப்பெற்று வருகிறது என்பதும் சில அறிஞர்களது கருத்து. 21 ஆம் நூற்றாண்டின் புதிய உலக ஒழுங்கில் ஆறு வல்லரசுகளை அதிகார மையங்களாக இனங்காட்டுகிறார் ஹென்றி கிசின்யர் (Henry Kissinger) அமெரிக்கா, ஐரோப்பா, ரஷ்யா, சீனா, ஜப்பான், இந்தியா ஆகிய வல்லரசுகளும் பல்வேறு நடுத்தர அரசுகளும், சிறிய நாடுகளுமாக எதிர்கால சர்வதேசக் கட்டமைப்பு அமையப்பெறும் என்பது அவரது கருத்து. கம்யூனிஸ பூதம் என்ற ஒரு பொது எதிரி இல்லாத காரணத்தினால், காலப்போக்கில் ஆயுதப்போட்டி தணிந்து, அமெரிக்காவின் இராணுவ வல்லாதிக்கம் படிப்படியாக வீழ்ச்சி அடையும். புதிய வல்லரசுகளின் மத்தியில் இராணுவச் சமநிலை தோன்றும். நாடுகள் மத்தியிலான உறவுகள் உலகமயமாகும். தீவிரமாக வளர்ந்துவரும் தகவல் தொடர்பு தொழில்நுட்பமும் தங்குநிலைப் பொருளாதாரமும் கண்டங்களையும் நாடுகளையும் ஒத்திசைவான ஒரே உலக ஒழுங்கில் இணைத்துவிடும் என்கிறார் ஹென்றி கிசின்யர்.

*கம்யூனிஷ பூதம் என்ற ஒரு பொது எதிரி இல்லாத காரணத்தினால், காலப்போக்கில் ஆயுதப்போட்டி தணிந்து, அமெரிக்காவின் இராணுவ வல்லாதிக்கம் படிப்படியாக வீழ்ச்சி அடையும். புதிய வல்லரசுகளின் மத்தியில் இராணுவச் சமநிலை தோன்றும். நாடுகள் மத்தியிலான உறவுகள் உலகமயமாகும். தீவிரமாக வளர்ந்துவரும் தகவல் தொடர்பு தொழில்நுட்பமும் தங்குநிலைப் பொருளாதாரமும் கண்டங்களையும் நாடுகளையும் ஒத்திசைவான ஒரே உலக ஒழுங்கில் இணைத்துவிடும் என்கிறார் ஹென்றி கிசின்யர்.*

உலக அரசியலையும் உலக வரலாற்றுப் போக்கையும் மனித சமூகங்களின் பண்பாட்டு வாழ்வின் வரையறுக்கப்பட்ட வட்டத்துக்குள் பார்க்க முனைவது தவறு. மனி தர்களின் சமூக வாழ்வில் பண்பாடு முக்கியமானதே. பண்பாடானது சமூகங்களின் ஆன்மா வாக, சமூக உறவு களுக்கு ஆதாரமாக, சமூக ஒழுங்கிற்கு அத்திபாரமாகத் திகழ்கிறது. எனினும், மனித அபிலாஷைகளின் பரிணாமம் அகன்றது. அவற்றைப் பண்பாட்டு உலகிற்குள் முடக்கிவிட முடியாது. தனி மனிதர்களும் சரி, சமூகங்களும் சரி, நாடுகளும் சரி, வாழ் நிலையை மேம்பாடு செய்வதையே நோக்கமாகக் கொண்டு இயங்குகின்றன. ஏழ்மையும் வறுமையும், அடக்குமுறையும் அநீதியும் அகன்ற சமூக சூழலில் சுதந்திரமாக, கௌரவமாக, சகல உரிமைகளுடனும், சகல வாய்ப்புகள் வசதிகளுடன் நிறைவாக வாழ்வதையே மனிதர்கள் விரும்புகிறார்கள். வாழ் நிலையை மேம்பாடு செய்து முன்னேற வேண்டும் என்பதே பொதுவாக எல்லா மனித சமூகங்களினதும் அபிலாஷையாகும். சுதந்திரமாக வாழவேண்டும் என்ற விடுதலை வேட்கையும், வாழ் நிலையை மேம்பாடுசெய்து முன்னேற வேண்டும் என்ற அபிலாஷையுமே மானிடத்தின் பிரதான உந்து சக்தியாக விளங்குகின்றன. மனித சுதந்திரத்தையும் முன்னேற்றத்தையும் (Human freedom and progress) நோக்கிய மானிட சமூகத்தின் உயர்நிலை வளர்ச்சிப் போக்காகவே மனித வரலாறு அசைந்து செல்கிறது.

● (முற்றும்)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

*"இந்த எழுத்துக்கள் யாரையாவது சிந்திக்கத் தூண்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு" - என்ற எதிர்பார்ப்புடன் அவர் வரைந்த இந்தக் கட்டுரைத் தொடரை நமது தற்போதைய சமூகத்தின் சிந்தனைக்காக இங்கு முன்வைக்கிறோம்.*

*அவர் எதிர்பார்த்தமை போல மனித மனம் பற்றிய இந்தத் தொடர், நமது வாசகர்களின் சிந்தனையைத் தூண்டும் என்றே நாமும் நம்புகிறோம்.*

*அவரது சிந்தனைத் தெளிவை நாமும் தரிசிப்போம். வாருங்கள்...!*

காலைக்கதிர்
Kalaikkathir





சுவிஸில் இருந்து காலைக்கதிருக்காக
மூத்த ஊடகவியலாளர் குகா

சுவிற்சர்லாந்தில் ஸ்கந்தவேல் ஆலயம் Graubunden மாநிலத்தில் அல்பன் மலை உச்சியில் Fideriser என்னும் இடத்தில் அமைந்துள்ளது. 14.10.2016 வெள்ளிக்கிழமையன்று ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த ஆலயம் இங்கிலாந்து வேல்ஸ் ஆலயத்தின் கிளையாக உள்ளது. இதில் சுவிஸ் நாட்டவர்கள் பூசை செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கும்பாபிஷேகத்தைத் தமிழ்நாட்டின் குருக்கள் சற்குரு சரவணபாபா சுவாமிகள் முன்னிலையில் நடத்தி வைத்தார். மூலவர் மூன்றுதலை நாகத்துடன் சிவன் சோமஸ்கந்தராக அருள்புரிகின்றார். நான்கு பக்கமும் மலைகளால் சூழப்பட்டு அமைதியான சூழலில் அமைந்துள்ளது. தற்போது மண்டலபூசை நடைபெற்று வருகிறது. 27.10.2016 வியாழக்கிழமை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்திலிருந்து அதன் நிர்வாகத்தினர் கணேசகுமார், அற்புதராஜா, மகாலிங்கசிவம் ஆகியோர் மண்டல பூசையில் கலந்துகொண்டனர்.



# சுவிஸில் சமயப்புரட்சி



அழகுமிகு சுவிற்சர்லாந்து நாட்டில் அமைந்துள்ள அல்பன் மலையின் உச்சியில் கடல் மட்டத்தில் இருந்து 2 ஆயிரம் மீற்றர் உயரத்தில் சோமஸ்கந்தவேல் என்ற நாமத்தில் முருகன் ஆலயம் ஒன்றை சுவிஸ் நாட்டு பக்தர்கள் அமைத்துள்ளனர்.

முற்றுமுழுதாக சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஆண், பெண் துறவிகள் இணைந்து அமைத்துள்ள ஆலயத்தின் கும்பாபிஷேகம் கடந்த செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றுள்ளது.

சுவிற்சர்லாந்து நாட்டில் 24 சைவ ஆலயங்கள் புலம்பெயர்ந்த மக்களால் அமைக்கப்பட்டுள்ளன. அந்த ஆலயங்கள் செங்காலன், சூரிச், பேர்ண், ஜெனீவா, சொலத்ண்,பாசல்,லுசேர்ண் போன்ற நகரங்களில் புலம்பெயர்ந்த தமிழர்களால் அமைக்கப்பட்டு நித்தியபூசைகள்,விசேட உற்சவங்கள் சமய விதிமுறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன.


தற்போது அல்பன் மலை உச்சியில் சுவிற்சர்லாந்தின் இந்து துறவிகளால் அமைக்கப்பட்டுள்ள ஆலயத்திலும் சமய விதிமுறைப்படி உற்சவங்கள்,பூசைகள் நடைபெறுகின்றன. 1994 ஆம் ஆண்டு அவர்கள் மனதில் உதித்த கனவின் அடிப்படையில் இந்த ஆலயம் அமைப்பதற்கான அத்திபாரம் இடப்பட்டது.

2011 ஆம் ஆண்டு ஆலயம் அமைக்கும் பணிகள் பூர்த்தியாகின.அதன்பின்னர் என ஆலய மூர்த்திகள் அமைக்கும் பணிகள் பூர்த்தியாகின. ஆலயமூர்த்திகள் ஸ்தாபிக்கும் பணிகள், ஆலயத்துக்குச் செல்லும் வீதி அமைக்கும்பணி,பக்தர்கள் தங்குமிடம் அமைக்கும்பணி யாவும் பூர்த்தியாகிக் கடந்த செப்ரெம்பரில் மஹாகும்பாபிஷேகம் இடம்பெற்றுள்ளது.


சுவிஸ் நாட்டைச் சேர்ந்த சுவிஸ் இனத்தைச் சேர்ந்த-குருமார்கள், தமிழகத்திலிருந்து வந்த இந்துக் குருக்களின் உதவியுடன் இந்தக் கும்பாபிஷேகம் நடைபெற் றுள்ளது. சற்குரு சரவணபவா சுவாமி களின் ஆசியுடன் அவ ரது முன்னிலையில் கும்பாபிஷேகம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் செங்காலன் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயநிர்வாகத்தலைவர் வே.கணேசகுமார், உப தலைவர் மகாலிங்கசிவம், பொருளாளர் அற்புதராஜா ஆகி யோரும் கலந்து சிறப் பித்துள்ளனர். Graubunden மாநிலத்தில் Fideriser என்னும் இடத்தில் கடல் மட்டத் திலிருந்து 2 ஆயிரம் மீற்றர் உயரத்தில் சோமஸ் கந்தவேல் என்ற நாமத்தில் அழைக்கப் படும் இந்த முருகன் ஆலயத்தில் மூல மூர்த்தியாக சோமஸ்கந்தர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.









# அல்பன் மலையில் முருகன்!

மூன்றுதலை நாகத்துடன் சிவன், அம்பாள், முருகன் கொண்ட சோமஸ்கந்தராக மூலவர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.அத்துடன், ஆலய உட்பிரகாரத்தில் விநாயகர், நவக்கிரகம், நந்தி போன்ற மூர்த்தங்களுக்கு தனி ஆலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயத்துடன் இணைந்து 80 பேர் தங்கக்கூடிய வசதியுடன் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்துக்கான அடிக்கல் 1994 ஆம் ஆண்டு இடப்பட்டு 22 வருடங்களின் பின் வேலைகள் யாவும் பூர்த்தியாகி மஹாகும்பாபிஷேகம் இடம்பெற்று மண்டலாபிஷேகம் நடைபெற்றுள்ளது. லண்டனில் மலைப் பகுதியில் அமைந்துள்ள வேல்ஸ்முருகன் ஆலயத்தின் கிளையாக இந்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் தினமும் 3 நேரப்பூசைகள் சுவிஸ் நாட்டவர்களான குருமார்களால் நடத்தப்பட்டுவருகின்றன. பெரும் எண்ணிக்கையான சுவிஸ் நாட்டவர்கள் தினமும் ஆலயத்துக்குச் சென்று வழிபடுகின்றனர். ஆலயத்தில் வாரமொரு தடவை தியானப்பயிற்சியும் கருத்தரங்கமும் நடத்தப் படுகின்றன.

சுவிற்சர்லாந்தில் அந்த மக்களால் அமைக்கப்பட்ட இந்த ஆலயத்தின் செயற்பாடுகளை பார்க்கும்போது, எம்மதத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள பற்றுறுதியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இலங்கையிலோ தமிழகத்திலோ இல்லாத அளவுக்கு எம்மதத்தின் மீது சுவிஸ் மக்கள் கொண்டுள்ள பற்றை நினைத்து நாம் பெருமைப்பட வேண்டும். இது ஒரு சமயப்புரட்சி என்றே கூறலாம்.

வேற்று நாட் டவர்களைக் கவரும் வகையில் எமது மதத்தின் அடிப்படைகள் இருப்பதையே இந்த ஆலயச் செயற்பாடுகள் காட்டுகின்றன. இதைப் பார்த்து ஒவ்வொரு சைவரும் பெருமைப்படலாம். ★

நேர்காணல்: இக்பால் அலி

# புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் பிறந்த மண்ணுக்கே சேவைத் தொண்டு...!

## சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் வேலாயுதம்

இலங்கையில் மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசமாக மருத்துவ சிகிச்சைகள் செய்து சமீபத்தில் ஆஸ்திரேலிய சமூக ஆய்வு நிலையமும் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகமும் நடத்திய தெரிவில் சர்வதேச விருதைப் பெற்றுக் கொண்டவர்தான் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம்.

இவர் லண்டனில் இடம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தாம் பிறந்த மண்ணில் வாழும் மக்களின் தேவை கருதி பல்வேறு சமூகத் தொண்டு சேவைகளை ஆற்றி வருகிறார். தன்னுடைய கடும் உழைப்பால் தேடிய பணங்களை வடபுல மாணவர்களின் கல்விக்காகவும் ஏழை மக்களின் அன்றாட வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும் விளையாட்டுத் துறைக்காகவும் மனமுவந்து செலவு செய்து வருகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்து பணியாற்றி வருகின்றார்.

இவர் 'காலைக்கதிர்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி இங்கே தரப்படுகிறது:-

**மாற்றுத் திறனாளிகள் மீது அதிக அக்கறை கொண்டு பல்வேறு சேவைகள் செய்து வரும் நீங்கள் மாணவர்க்குக் கல்வி நிலை குறித்தும் கவனம் செலுத்தி வருகின்றீர்கள் அது குறித்துக் கூறுவீர்களா?**

இன்று என்னுடைய மகன் சிவனின் பிறந்த தினமாகும். ஆனால் அவர் உயிரோடு இல்லை. அவருடைய பெயரில்தான் சிவன் மாற்றுத் திறனாளிகள் நிலையத்தை ஆரம்பித்தேன். இந்த நிலையம் இந்த நாட்டிலுள்ள சகல இன மக்கள் மத்தியிலும் பிரபல்யம் பெற்ற ஒன்று. இதில் நாடு தழுவிய ரீதியில் 10 கிளை சிகிச்சை நிலையங்கள் உள்ளன. இதன் மூலம் கணிசமானளவு மாற்றுத் திறனாளிச் சிறார்கள் நன்மையடைந்துள்ளார்கள். அவர்களுக்கு தொடர்ந்து என்னாலான உதவிகளையும் பங்களிப்புக்களை வழங்கி வருகின்றேன்.

### கல்வித்தாகம் இன்றி பெற்றோர்கள்

அதேவேளை, எமது யாழ்ப்பாண மாணவர்களின் இன்றைய கல்வி நிலை கேள்விக்குரியதாக இருக்கிறது. இது தொடர்பாகப் பெரியளவில் யாரும் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. இது பற்றி விமர்சனம் செய்கின்றார்களே தவிர வேறு எவ்வகையிலான நடவடிக்கையும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. ஆனால், இவர்கள் வெறு மனே கதைத்துவிட்டுப் போகலாம். ஆனால், நாங்கள் கதைப்பதில்லை. திட்டமிட்ட அடிப்படையில் வேலைகளைச் செய்துவருகின்றோம்.

இன்றைய நவீன யுகத்தில் கல்வித் தாகம் இன்றி எமது தமிழ் மாணவச் சமூகத்தினுடைய பெற்றோர்கள் உள்ளார்கள் என்பது கவலை தருகின்றது. பின் தங்கிய கிராமங்களில் வாழும் பெற்றோர்கள், மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதில்லை. அதில் அக்கறை காட்டுவதும் இல்லை. ஒவ்வொரு வருடமும் இத்தகைய கவனக் குறைபாட்டால் அல்லது அலட்சியத்தால் பாடசாலையை விட்டு விலகும் மாணவச் சமூகத்தின் தொகை அதிகரித்துச் செல்கிறது. அவர்களது எதிர்காலத்தைத் தொலைத்து விட்டு நடுத்தெருவில் நிற்பதைப் பார்க்கின்றோம்.

கல்வி அவசியம் பற்றி எல்லோரும் பேசுகின்றோம். கல்வி மாணவர்களின் எதிர்கால நல் வாழ்வுக்கான ஒன்று. கல்வி இன்றிய மையாதது என நாம் வலியுறுத்தி வருகின்றோம். ஆனால், மாணவர்களின் சிந்தனைகள் வேறு திசைகளில் திருப்பப்பட்டு - பயன் தரும் விடயங்களில் நாட்டம் அற்ற நிலையில் - பயனற்ற சிந்தனைகளில் ஆர்வம் கொண்டதாக - உள்ளன. இவ்வாறு கல்வியில் ஆர்வம் குன்றிய மாணவர்களை இனங்கண்டு, அவர்களுக்குப் பிரத்தியேகமான வகுப்புக்களில் கல்வி கற்பதற்கான வசதிவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றோம்.

அது மட்டுமல்ல, சில பாடசாலைகளுக்குச் சத்துணவு வழங்கி, மாணவர்களின் போசாக்கற்ற தன்மையை நீக்குவதில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

**நீங்கள் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் என்ன?**


அரசால் சகலருக்கும் பொதுவான இலவசக் கல்விமுறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனாலும், போர் முடிவுற்று ஏழு வருடங்கள் கடந்த போதிலும், போரால் பாதிப்புற்ற விரக்தி மனப்பாங்கான சூழலிலிருந்து தமிழ் மக்கள் இன்னும் விடுபடவில்லை. காணாமற்போனவர்கள் பற்றியும் உயிரிழந்தவர்கள் பற்றியும் உணர்வுபூர்வமாக எண்ணி எண்ணி, மனம் நொந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் கல்வியின் தேவை பற்றி உயிரோட்டமாகச் சிந்திப்பதற்குக் கூட மறந்து விடுகிறார்கள்.

### அக்கறையில்லாத அரசியல்வாதிகள்

கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்று சொல்லும் மக்கள் பிரதிநிதிகள் கூட, எமது மக்களின் கல்வித்தேவை குறித்துக் கண்டு கொள்வதில்லை. கல்விச் சேவை என்றால் என்ன? பொதுவாக எல்லா வளங்களையும் பெற்றுக் கொடுத்தால் போதுமென்ற பொதுஎண்ணத்தில் வேரூன்றி விடுகின்றார்கள். இதனால் தான் பாடசாலைக் கட்டடத்துக்கு அடிக்கல் நடுதல், பாடசாலைக் கட்டடங்களைத் திறந்து வைத்தல் போன்றவற்றில் அவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டுகிறார்கள். பாடசாலையை விட்டு விலகி நிற்கும் மாணவர் சமூகம் பற்றி அவர்கள் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. மாணவர்கள் பாடசாலைக்குத் தவறாமல் சமூகம் கொடுக்கக்கூடிய 'விருப்புடன் கற்பித்தல்' நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. தமது ஆசிரியர், ஆசிரியைகள் அன்பானவர்கள், அரவணைப்புள்ளவர்கள், இனிமையானவர்கள் என்ற எண்ணத்தை மாணவர்களுக்கு உருவாக்கி அவர்களைப் பாடசாலைக்கு வரவழைக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. ஆனாலும் வீட்டில் காணப்படும் கடுமையான வறுமையின் சூழல் இந்தப் பிள்ளைகள் பாடசாலைக்கு வருவதற்குத் தடையாக இருக்கிறது.

இலவசமாகச் சீருடை வழங்கப்படுகிறது. ஆனால், அதனைத் தைத்து தொடர்ந்து அணிந்து பாடசாலைக்குச் செல்ல முடியாது. ஒரு சவர்க்காரக்கட்டி வாங்கி அதனைக் கழுவி மறுபடியும் அணிந்து செல்வதற்கு வசதியற்ற நிலையில் மாணவர்கள் உள்ளனர். இவர்கள் வீட்டில் காணப்படும் கொடும் வறுமை நிலையைக் கருத்திற் கொண்டு இடைநடுவில் தொழில் செய்வதற்காகப் பாடசாலையை விட்டு விலகுகின்ற ஒரு துரதிஷ்டமான நிலைக்கு அவர்கள் வந்து விடுகின்றார்கள். இதனாலேயே பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் வீட்டுச் சூழலை முதலில் கவனத்தில் கொண்டு மனிதாபிமானப் பணிகளைச் செய்து வருகின்றோம். வறிய மாணவர்களுக்குப் பிரத்தியேகமான வகுப்புகளுக்குச் செல்வதற்கான நிதி உதவிகள் வழங்குகின்றோம். வருடாவருடம் கற்றல் உபகரணங்கள் வழங்கி வருகின்றோம், சில பாடசாலைகளுக்கு சத்துணவு வழங்குகின்றோம்.

வறிய மாணவர்கள் காலை உணவு உட்கொண்டு விட்டு வருவதில்லை. கல்வி கற்பதற்கு உடம்புக்கு ஊட்டச் சதுள்ள உணவு அவசியமாகும். பின் தங்கிய அதி கஷ்டப் பிரதேசத்திலுள்ள சில குறிப்பிட்ட பாடசாலைகளுக்குச் சத்துணவு வழங்கி வருகின்றோம். இலவசக் கல்விக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றோம். பாடசாலை மட்டத்தில் விளையாட்டுப்போட்டி துறை சார்ந்த விடயங்களை ஊக்குவித்து வருகின்றோம் எனப் பலவற்றைக் குறிப்பிடலாம்.






**நீங்கள் விளையாட்டுப் போட்டி விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தி வருவதை அவதானிக்கின்றோம். இதற்கான காரணம் என்ன?**

வடபுலத்தில் அனைத்து விளையாட்டுத்துறையிலும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் திறனை வெளிப்படுத்தக் கூடிய வீரர்கள் இருக்கின்றனர். ஆனால், அவர்களுக்குரிய வளங்களோ ஊக்குவிப்புக்களோ வேண்டிய அளவில் இருக்கின்றன என்று கூற முடியாது. எனினும், குறிப்பிட்ட பாடசாலைகள் விளையாட்டுத் துறையை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றன. ஆனாலும் எமது மண்ணைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் தேசிய மட்டத்தில் பிரகாசிக்கக் கூடியவர்களாக உள்ளனர். அவர்களை நாங்கள் பாராட்டிக் கௌரவித்து வருகின்றோம். அவர்களுடைய துறைகளுக்கு ஏற்ப தேவையான பயிற்சி மற்றும் உதவிகளைப் பெற்றுக் கொடுத்து வருகின்றோம்.

நீளம் பாய்தல் போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்ற உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி சிவகுமார் ஆரணியைப் பாராட்டி கௌவிக்கும் நிகழ்வும் சிவன் அறக்கட்டளை நிறு வனத்தின் அனுசரணையுடன் பாடசாலை மைதானத்தில் நீளம் பாய்தலுக் கான விளையாட்டுத் திடல் நிர்மாணித்து கையளிக்கும் நிகழ்வும் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் சமீபத்தில் நடைபெற்றன.


சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை பாடசாலைகள் சம்மேளனம் யாழ். மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனத்துடன் இணைந்து 13 வயதுக்கு உட்பட்ட மாணவருக்கான உதை பந்தாட்டப் போட்டியை நாங்கள் நடத்தினோம். இந்த உதைபந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் நாவாந்துறை றோ.க.வித்தியாலய அணியும், பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலையும் சம்பியனாகின.

ஆண்களுக்கான இறுதி ஆட்டத் தொடரில் நாவாந்துறை றோ. க .வித்தியாலய அணியை எதிர்த்து கொற்றாவத்தை அ. மி. த. க. அணி மோதியது. 1:1 என்ற கோல் போட்டதால் சம நிலைத் தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. நாவாந்துறை றோ. க. வித்தியாலய அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இதேவேளை மகளிர் தரப்புக்கான போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலைக்கு எதிராக மகாஜனக் கல்லூரி மோதியது. அதில், பண்டதரிப்பு பெண்கள் பாடசாலை 2:1 என்ற கோல் கணக்கில் பெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

(19ஆம் பக்கம் பார்க்க)

வான்.வேணு கிருஷ்ணா



இறுதிவரை கறைபடாத கைகளுடன் வாழ்ந்தார். அவரது அரசியல் எதிரிகளின் சொத்து வகைதொகை இல்லாமல் ஏற, சிபாஸின் சொத்துகள் இறங்கு முகத்தில் இருந்தன. தன் அப்பாவால் கட்டப்பட்ட வீடுகளை விற்றுத்தான் 1948இக்கான அதிபர் தேர்தலில் போட்டியிட்டார்.



# யாருக்கும் இல்லாத பெருமை

17

# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"

**யா**ருக்கும் இல்லாத ஒரு பெருமை பிடல் காஸ்ட்ரோவுக்கு உண்டு. உலகின் மேற்குப் பகுதியில் முதன்முதலாக ஒரு கம்யூனிஸ தேசத்தை உருவாக்கியவர் அவர். 1926 ஒகஸ்ட் 13 அன்று பிறந் தவர். இளம் வயதிலேயே தடாலடிச் செயல்களைச் செய்தவர்.

படித்தது மதபோதகப் பள்ளிகளான ஜெசூட் கல்வி அமைப்புகளில்தான். படிப்பில் நிறைய நாட்டம் கொண்டவர். முக்கியமாக ஸ்பானிஷ் மொழியில் மிகுந்த தேர்ச்சி கொண்டவர். விவசாயம் மற்றும் வரலாறு ஆகிய பாடங்கள் என்றால் அவருக்கு மிகவும் விருப்பம். பாடங்கள் ஒருபுறமிருக்க பாடமல்லாத விஷயங்களிலும் மிகுந்த அக்கறை காட்டினார்.

அரசியலில் மாளாத ஆர்வம். தவிர தடகளப் போட்டிகளிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். ஆனால் இத்தனை இருந்தும் அவர் கூச்ச சுபாவம் கொண்டவராக இருந்தாராம். பிறருடன் எளிதில் பழகமாட்டார். ஆனால் இந்தக் கூச்சமெல்லாம் கல்லூரியில் சேரும் வரையில்தான்.

1945 இல் கியூபாவின் தலைநகரில் இருந்த ஹவானா பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பை எடுத்துப் படித்தார். அந்த ஊர் சட்டக் கல்லூரியிலும் வன்முறை, அரசியல், கோஷ்டி மோதல் ஆகியவை நீக்கமற நிறைந்திருந்தன.

பிடல் காஸ்ட்ரோவும் ஓர் புரட்சி இயக்கத்தில் சேர்ந்தார். அதன் பெயர் The Union Insurreccional Revolucionaria என்பதாகும். இந்தக் காலகட்டத்தில் பிடல் காஸ்ட்ரோ மீது சரியாகவோ தவறாகவோ சில குற்றச்சாட்டுகள் எழுந்தன. அவற்றில் முக்கியமானது எதிரணியைச் சேர்ந்த ஒரு மாணவர் தலைவனை அவர் கொலை செய்தார் என்பது. பரவலாகப் பேசப்பட்டாலும் இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை.

கல்லூரிப் பருவத்தில் பிடல் காஸ்ட்ரோவின் அபாரமான பேச்சுத் திறமை வெளிப்பட்டது. கல்லூரியில் அவர் மாணவர் சங்கத் தலைவர் பதவியை வகிக்கவில்லை. அப்படிப்பட்ட ஆசை அவருக்கு இல்லை என்பதில்லை. சிலமுறை மாணவர் சங்கத் தேர்தலில் நின்றும் அவர் ஜெயிக்கவில்லை. என்றாலும் பிடல் காஸ்ட்ரோவின் புகழ் பரவிக் கொண்டேவந்தது. அவரது அரசியல் ஆசையும் பெருகிக் கொண்டே வந்தது.

ரஃபேல் ட்ரூஜில்லோ என்பவர் டொமினிகன் குடியரசை ஆண்டு வந்தார் (மேற்கிந்தியத் தீவுகளில் கியூபாவுக்கு அடுத்த பெரிய நாடு இது). இவரது அரசின் அடக்கு முறையை எதிர்த்துப் பிரபல எழுத்தாளர் ஜுவான் போஷ் என்பவர் உருவாக்கிய புரட்சிப் படையில் சேர்ந்து கொண்டார் பிடல் காஸ்ட்ரோ.

இதற்காக அவர் தற்காலிகமாகப் பல்கலைக்கழகப் படிப்பிலிருந்து விலகினார். (இப்போதெல்லாம் பணியிலிருந்து சிறிது காலம் விலகி மீண்டும் அதில் சேரும் Sabbatical என்ற வசதி சில நிறுவனங்களில் இருப்பது போல் அப்போது ஹவானா பல்கலைக்கழகத்திலும் இருந்திருக்க வேண்டும்!)

ஆனால் டொமினிகன் குடியரசை நோக்கி கப்பலில் இந்தப் புரட்சிக் குழு பயணம் செய்து கொண்டிருந்தபோது திடீரென்று 'இப்போது செயல்பாடு வேண்டாம்' என்ற ஆணை வந்தது.

அப்போது பிடல் காஸ்ட்ரோ எதிர்பாராத ஒரு செயலைச் செய்தார். கடலில் குதித்தார். தன் தலைமீது துப்பாக்கியை சுமந்தபடி வெகுதூரம் கடந்து கரையை அடைந்தார். அந்தப் பகுதியில் சுறாமீன்கள் அதிகம் என்பதும் இந்தத் தகவல் பிடல் காஸ்ட்ரோவுக்குத் தெரியும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

அதற்கு அடுத்த ஆண்டு பிடல் காஸ்ட்ரோ பலவித செயல்களில் ஈடுபட்டார். அந்தச் செயல்களைப் புரட்சி என்று கூறி சிலிர்ப்பதோ, வன்முறை என்று கூறி வெறுப்பதோ அவரவர் பார்வையைப் பொறுத்தது.

### கம்யூனிஸ ஈர்ப்பு

கொலம்பியாவில் லிபரல் கட்சித் தலைவர் ஜார்ஜ் கெய்டான் என்பவர் படுகொலை செய்யப்பட அந்த நாடே கலவரங்களில் பற்றி எரியத் தொடங்கியது. அந்தக் கலவரங்களில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார் பிடல் காஸ்ட்ரோ. தெருக்களில் வீடுவீடாகச் சென்று அமெரிக்காவுக்கு எதிரான அறிக்கைகளை விநியோகித்தார்.

கொலம்பிய ஆட்சியாளர்கள் கியூபா மாணவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுப்பதற்காக அவர்களைத் துரத்த, அவர்கள் கொலம்பியாவில் உள்ள கியூபா தூதரகத்தில் சரணடைந்தனர். பிறகு அங்கிருந்து ஹவானா வந்து சேர்ந்த பிடல் காஸ்ட்ரோ தனது சட்டப் படிப்பைத் தொடர்ந்தார்!

பல்கலைக்கழகத்தில் பயின்றபோது கம்யூனிசத்தைப் பற்றி அதிகமாகத் தெரிந்துகொண்ட பிடல் காஸ்ட்ரோ அதனால் ஈர்க்கப்பட்டார். கூடவே அரசியலில் நேரடிப் பங்கேற்கும் ஆர்வமும் வந்தது.

கியூபாவில் அப்போது ஆர்டொடாக்ஸோ கட்சி என்ற ஒன்று இருந்தது. நாட்டிற்கு பொருளாதாரச் சுதந்திரம் தேவை என்றது அந்தக் கட்சி. சமூக நீதியை முன்வைத்தது. ஆட்சிக்கு வந்ததும் ஊழலை ஒழிப்பது தன் தலையாய பணி என்றது. பிடல் காஸ்ட்ரோ இந்தக் கட்சியின் சித்தாந்தங்களினால் ஈர்க்கப்பட்டார்.

### வானொலி வர்ணனையாளராக

ஆர்டொடாக்ஸோ கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார் பிடல் காஸ்ட்ரோ. அதுவும் அந்தக் கட்சியின் தலைவராக இருந்த எடுவார்டோ சிபாஸ் என்பவரை பிடல் காஸ்ட்ரோவுக்கு ரொம்பவும் பிடித்துப் போனது.

இந்த இடத்தில் எடுவார்டோ சிபாஸ் குறித்து சில விஷயங்களைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். அவர் ஒரு போதும் கியூபாவின் ஆட்சித் தலைவர் ஆனதில்லை. ஆனால் அந்தக் காலகட்டத்தில் (1940இல் இருந்து அவர் மறைந்த 1951 வரை என்று வைத்துக் கொள்ளலாம்) அவர் கியூபாவின் அரசியலில் அசைக்க முடியாத சக்தியாக விளங்கினார்.

கியூபாவின் மிகக் கவர்ச்சிகரமான வானொலி வர்ணனையாளராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கியவர் இவர். அப்போது அரசின் கொள்கைகளைப் பற்றி அழகாக விமர்சித்து பலரது மனங்களை மாற்றினார். முக்கியமாக கியூபாவின் ஊழல் அரசியல்வாதிகளை பகிரங்கப்படுத்தினார்.

### கறைபடாத கைகள்

இறுதிவரை கறைபடாத கைகளுடன் வாழ்ந்தார். அவரது அரசியல் எதிரிகளின் சொத்து வகைதொகை இல்லாமல் ஏற, சிபாஸின் சொத்துகள் இறங்கு முகத்தில் இருந்தன. தன் அப்பாவால் கட்டப்பட்ட வீடுகளை விற்றுத்தான் 1948இக்கான அதிபர் தேர்தலில் போட்டியிட்டார். (பின்னர் 1933 புரட்சி, படிஸ்டாவுக்கெதிரான போராட்டம் என்று பல விதங்களில் இவரது பங்களிப்பு தொடர்ந்தது). இப்படி ஒரு பின்னணி கொண்ட சிபாஸினால் ஈர்க்கப்பட்டுத்தான் அவரது கட்சியில் சேர்ந்தார் பிடல் காஸ்ட்ரோ.

கியூபாவின் தலைநகரான ஹவானா பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்த பிடல் காஸ்ட்ரோவுக்கு அரசியலில் ஆர்வம் அப்போதே கொழுந்து விட்டெரிந்தது. 1952இல் அங்கு நடைபெறுவதாக இருந்த தேர்தலில் போட்டியிட முயன்றார். ஆனால் அதற்குள்ளாக அரசை இராணுவத் தலைவர் படிஸ்டா கைப்பற்றியதால் பொதுத் தேர்தல்கள் இரத்துச் செய்யப்பட்டன.

இதன் விளைவாகவோ என்னவோ ஜனநாயகம் என்பதை ஏற்க மறுத்தார் பிடல் காஸ்ட்ரோ. ஆயுதப் புரட்சிதான் சரியான வழி என்று தீர்மானித்தார். 1953இல் இவரும் இவர் சகோதரர் ரவுல் காஸ்ட்ரோவும் இணைந்து படிஸ்டா அரசின் மீது தாக்குதல் நடத்த, கிடைத்தது ஆட்சி அல்ல. 15 வருட சிறைத் தண்டனை. பின்னர் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. மெக்ஸிகோவுக்கு தப்பிச் சென்றார் பிடல் காஸ்ட்ரோ. அங்கு அர்ஜென்டினாவைச் சேர்ந்த மாக்ஸியத் தலைவர் சேகுவாராவின் நட்பும், ஆதரவும் கிடைத்தது.




(கேள்வி தொடரும்...)

# ஊடுருவுகிறது உயிர்கொல்லி எயிட்ஸ்

## தனி மனித எச்சரிக்கை அவசியம்



மருத்துவர்
வெற்றிவேல் நாகநாதன்






ஊருடுவும் உயிர்கொல்லி எனும் கருப்பொருளில் போரின் பின்னான சர்வதே ஆய்வுக் கருத்துக்களை மையமாகக் கொண்டு. எய்ட்ஸ் விழிப்புணர்வு ஆவணக் காணொலியைத் தயாரித்து. சமூக வலைத் தளத்தில் வெளியிட்டு எய்ட்ஸ் விழிப்புணர்வை மேற்கொண்டு வருகிறார் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவர் வெற்றிவேல் நாகநாதன். இது அவரது தனி மனித செயற்பாடாகவே உள்ளது. எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு அவர் காலைக்கதிர் நாளிதழுக்கு வழங்கிய விசேட செவ்வி இது.

எய்ட்ஸ் விசமத்தனமாகவே பரவுகிறது என்பது மட்டுமின்றி அசாதாரணமான பரம்பலையும் காண்பிக்கின்றது. இதனால் சமூகப் பொறுப்பு அனைத்து மட்டங்களிலும் அவசியமாகின்றது.

சிகிச்சை மேற்கொள்பவர்களின் தரவுகளோ, தகவல்களோ யாழ். போதனா வைத்தியசாலையில் மிகவும் இரகசியமாகப் பேணப்படும். எச்.ஐ.வி. (HIV) தொற்றுக்குள்ளானவர்கள் மருத்துவரின் பராமரிப்பில் கணிசமான அளவு உடல் ஆரோக்கியத்தை மீட்டுக் கொள்ளலாம். எய்ட்ஸ் தொடர்பில் ஒவ்வொரு மனிதனும் விழிப்புடன் இருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

**கேள்வி:** தொழில்சார் சிரமங்களைத் தாண்டி தனிமனித முயற்சியாக எய்ட்ஸ் விழிப்பணர்வை மேற்கொண்டுவருகிறீர்கள். இவ்வாறான ஆர்வம் குறித்துக் கூறுங்கள்?

**பதில்:** தொழில்சார் சிரமங்களுடன் ஒப்பிடும்போது எதிர்காலத்தில் எமது சமூகம் சந்திக்கப் போகும் மிகப் பெரிய ஒரு சவால் அல்ல - ஒரு போர் - ஒரு பேரழிவு என்றே கூறவேண்டும். அதே நேரத்தில் கலாசார சிதைவு என்பது ஒரு மறைமுகப் போர் என்ற விடயம் போர்ச் சூழலைச் சந்தித்த சமூகத்தில் வெளிப்படையாகவே காண முடிகிறது.

ஒரு வயதான நோயாளியைக் காப்பாற்றுகின்றோம். இந்த நிலையில் ஒரு இளைஞன் அல்லது யுவதியை நோயில் சிக்கவிடலாமா? உதாரணத் துக்கு, தந்தை பாரிசவாத நோய்க்கு உள்ளாகின் அந்தக் குடும்பத்தின் சுமையை யார் சுமப்பது? இவ்வாறே ஒவ்வொரு குடும் பத்திலும் ஒவ்வொருவர் பாதிப்புறின் அந்த சமூகத்தின் நிலை என்ன?

வயது முதிர்ந்தவர்களால் இந்த நிலை உருவாகின்றது என்றால், இள வயதினர் தாக்கப்படும் போது சமூகத்தின் கட்டுமானம் சிதைவுறாமல் போகுமா?

எனினும் எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட ஒருவரின் பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம், பொருளாதாரம் இவை எல்லாம் தாண்டிச் சமுகத்தின் கோரப் பற்கள்... இவை பற்றியும் நாம் சிந்திக்கவேண்டும்.

இவ்வாறான பல்வேறுபட்ட சிந்தனைகள்தான் என்னை இவ்வாறான ஒரு பணிக்குள் கொண்டு வந்துள்ளது.

**கேள்வி:** இந்த நோய்க்கான விழிப்புணர்வு சமூகத்தில் எந்த அளவில் உள்ளது என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

**பதில்:** யார் யாரிடம் விழிப்புணர்வு இருக்க வேண்டும் என்று கூறுவதில் அர்த்தம் இல்லை. ஏனெனில் ஒவ்வொரு மனிதனிடமும் விழிப்புணர்வு அவசியம். தொழிலில் சிரமத்துக்கு மத்தியில் இவ்வாறான காணொளியை வெளியிட்டதில் இருந்தே விளங்கிக் கொள்ள வேண்டும்.

எய்ட்ஸ் தினம் என்பது மக்களுக்கான விழிப்புணர்வின் ஓர் அடையாளம். எனினும் எமது சமூகம், வருடத்தில் ஒரு தினம் என்பதைத் தாண்டித்தினமும் விழிப்புணர்வு என்னும் தளத்தினுள்ளே தள்ளப்பட்டுள்ளது.

**கேள்வி:** எய்ட்ஸ் தொற்று தொடர்பாகத் தாங்கள் கருதுவது யாது?

**பதில்:** பாலியல் தொழில் அல்லது நடத்தைப் பிறழ்வானவர்கள் எத்தனை பேர் இனங்காணப்பட்டனர் என்ற வினாவுக்கு விடை தேவை. சமூகத்தில் எத்தனை பேர் இவ்வாறான நிலையில் உள்ளனர்? இவர்களில் பலர் தாமாகவே முன்வந்து குருதிப் பரிசோதனைக்குப் பங்களித்துள்ளனர்.

இந்த வினாக்களின் விடையைத் தேடும்போது வினாதானாகவே முழுமைபெறும்.

**கேள்வி:** இவ்வாறானோர் தாமாகவே முன்வந்து குருதிப் பரிசோதனை மேற்கொள்வதன் மூலம் ஏற்படும் நன்மை யாது?

**பதில்:** பெண்களைப் பொறுத்தவரையில் அவர்களின் இலிங்க உறுப்பானது உடலியல் கட்டமைப்பு ரீதியாகத் தொற்றுக்கு மிகவும் ஏற்புடையதாகவே உள்ளது.

அதாவது பாலியல் ரீதியான தொற்றுக்கு ஏதுவாக அதியுயர் திரவதொடு பரப்பைக் கொண்டிருத்தல் இனங் காணப்படும்போது மருத்துவச் சிகிச் சையின் விளைவாக நோயாக்கியின் தொற்றுக்கான செறிவு மிகவும் குறைக்கப்படுகின்றது.

இதனால் ஏனையவர்கள் தொற்றுக்குள்ளாகும் வீதம் குறைகின்றது. ஆரோக்கியமான மனிதர் என்ற வரையறையினுள் வாழக் கூடிய நிலை ஏற்படும் என்று கூட கூறலாம்.

**கேள்வி:** கலாசாரம் பிறழ் வடைந்த நிலை என்று கூறுகிறீர்கள். அது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

**பதில்:** ஈராக், சிரியாவை ஒப்பிடும் போது இறுக்கமான மத ரீதியான சமூகம் உள்ளது. சற்றுக் கூர்ந்து கவனிப்பின் இங்கு பலதார மணம் என்பது கூட ஒரு மூடிய பாலியல் கட்டமைப்பு. இதில் நோய் காவும் செயற்பாடு இல்லை. இவர்களின் சமூகத்தைப் பொறுத்தவரை பாலியல் தொழில் என்பது தவிர்க்கப்பட்ட ஒரு விடயமாகும்.

**கேள்வி:** கலாசாரம் என்பது சிதைகின்றதா? அல்லது சிதைக்கப் படுகின்றதா?

**பதில்:** மிகவும் யோசிக்க வேண்டிய வினா. சிதைகின்றது என்பதும் சரி சிதைக்கப்படுகின்றது என்றாலும் சரியாகவே இருக்கும். சமூகம் சார்ந்த மேலாதிக்கம் என்ற பதத்தை வைத்தே மேலும் அர்த்தம் கொள்ளப் படும்.

**கேள்வி:** பரவல் தொடர்பான விழிப்புணர்வு என்பது எவ்வாறு அமைய வேண்டும். பரவலின் போக்கு எவ்வாறு உள்ளது?

**பதில்:** சில வரையறைகளுக்கு உட்பட்டேபதில் கூறவேண்டியுள்ளது. ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போதுமிகவும் ஒரு விசமத்தனமான பரவலாகவே உள்ளது.

இனப்பெருக்க உயிர்த்துடிப்புள்ள வயதினரை விட இளவயதினர் பாடசாலை செல்லும் வயதினர் பாதிப்படைவதே அதிகமாகவுள்ளது.

இதனை நோக்கும் போது ஒரு தோட்டத்தில் பூச்சிக் கொல்லியைக் கைகளால் தெளிப்பதை விட கருவி மூலம் உயர் வீச்சுடன் தெளிப்பது போன்றே உள்ளது.

**கேள்வி:** அவ்வாறாயின் இதனைத் தடுப்பது என்பது மிகவும் சிரமமானதா?

**பதில்:** முதலில் இதன் பரவலில் ஓர் அசாதாரணத் தன்மை உள்ளது என்பதை மக்கள் உணரவேண்டும். அதுவே அவர்களைச் சிந்திக்கத் தூண்டும். அதனால் வரும் விழிப்புணர்வு என்பது மிகவும் பெரிய தொரு சமூக சீர்திருத்தத்தை ஏற்படுத்தும். மருத்துவச் சட்டங்களால் ஒருவரை வலிந்து பரிசோதிக்க மருத்துவருக்கு அதிகாரமில்லை. அவர் விரும்பாத விடத் துச் சோதிக்க முடியாது.

பொதுவாக இவ்வாறான ஒரு வலையில் சிக்கியவர்களுக்கு தம்மை மீட்டுக் கொள்ள எத்தனிக்க முடியாத சமூக, பொருளாதார நிலை, தொழில் சமூக அந்தஸ்து பாதிக்குமா என்ற எண்ணம் இருக் கும். இவற்றுக்கு உரிய வகையில் பாதிப் புள்ளானவர்கள் வழிகாட்டப்படல் வேண்டும்.

பாலியல் தொழில் அல்லது நடத்தைக்கு உரியவர்கள் வாழும்வரை என்ற எண்ணத்தைவிட்டுக் குருதிப் பரிசோதனைக்குத் தயாராக வேண்டும்.

இதன் மூலம் இவர்களால் ஏற்படும் தொற்றுத் தவிர்க்கப்படும். அத்துடன் விரைந்த சிகிச்சை யால் உடல் தோற்றப் பொலிவை இழக்காது இருக்கலாம்.

நோயை இனங்காணும் மருத்துவருக்கு, நோயாளியின் மனைவிக்கோ அல்லது கணவருக்கோ நோயாளியின் அனுமதி யின்றிக் குறித்த விடத்தைக் கூற மருத் துவச் சட்டத்தில் இடமில்லை. அதாவது மிக இறுக்கமான இரகசியம் பேணல் என்பது உள்ளது.

இந்த இரகசியம் பேணும் விடயத்தை மக்கள் அறி யும் பட்சத்தில் தாமாகவே முன்வந்து பரிசோதிக்கும் நிலைமை ஏற்படும்.

**கேள்வி:** நோயாளியின் துணைக்கு விடயம் தெரிவிக்கப்படாது விட்டால் யாரால் நோய் ஏற்பட்டது என்று எவ்வாறு அறிவது?

**பதில்:** ஒருவருக்கு நோய் உள்ளது என்று அறியின் அவருடன் பாலியல் தொடர்பை யாராவது ஏற்படுத்த எத்தனிப்பரா? என்ற வினாவுக்கு விடை காணுங்கள். இந்த எச்சரிக்கை உணர்வு பலரது மனதைக் குடைகின்ற போது நோயின் பொறியினுள் சிக்காமல் தப்பிக்க முடியும்.

**கேள்வி:** மக்களுக்கு யாது கூற விரும்புகிறீர்கள்?

**பதில்:** நோயாளரை ஒதுக்காதீர்கள். அவர்களின் மனதில் பழிவாங்கும் எண்ணத்தை ஏற்படுத்திவிடாதீர்கள். எதிரிக்குக் கூட எயிட்ஸ் வரக் கூடாது என்ற மனநிலை அவர்களுக்கு வேண்டும்.

சிகிச்சையைத் தொடரும்போது ஆயுள் காலத்தை அதிகரிக்கலாம். நோயானது இளநிலையில் இனங்காணப் படும் போது சுகதே கிக்கான தோற்றப் பொலிவையும் உடற்கட்டமைப்பையும் மீளப் பெறலாம்.

யாழ். போதனா வைத்தியசாலை பாலியல் நோய் தொற்றுத் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் தாரணி குருபரன் அவர்களுடனான சந்திப்பின்போது, கிடைத்த புள்ளி விவரங்களின் அடிப்படையில் இலங்கையில் நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 436 பேர் எயிட்ஸ் நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

1987 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை 75 பேர் பயனடைந்துள்ளனர். இவர்களில் 40 பேர் மரணமடைந்துள்ளனர்.

எனினும் கடந்த 2 வருடங்களில் 2014, 2016 காலப் பகுதியில் 26 புதிய தொற்றுக்கள் இனம் காணப்பட்டுள்ளன. இது இந்த நோய்ப் பரம்பலில் மாறுபட்ட ஆர்முடுகல் இயக்கத்தைக் காட்டுகிறது.

# 2016 இன் பிரபலமாக மோடி தெரிவாகலாம்



வொஷிங்டன், டிசெ.01

இந்த ஆண்டின் செல்வாக்கான நபர்யார்? என்று 'டைம்ஸ்' பத்திரிகை நடத்தி வரும் கருத்துக் கணிப்பில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி முன்னிலையில் உள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சேர்ந்த 'டைம்ஸ்' பத்திரிகை, ஆண்டு தோறும் உலக அளவில் ஒரு பிரபலத்தை தெரிவு செய்து டிசெம்பர் மாத இதழில் அறிவிப்பது வழக்கம்.

இந்த ஆண்டின் சர்வதேச பிரபலத்தை தெரிவு செய்வதற்கான இணையத்தளவாக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. அதில் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள டொனால்ட்ட்ரம்ப், தற்போதைய ஜனாதிபதி ஒபாமா, ரஷ்ய ஜனாதிபதி புடின் ஆகியோரை பின்னுக்குத் தள்ளி பிரதமர் மோடி முன்னிலை பெற்றுள்ளார்.

மோடிக்கு 21 சதவீத வாக்குகள் கிடைத்திருக்கின்றன. ஒபாமா 7 சதவீதமும், ட்ரம்ப் 6 சதவீதமும் பெற்றுள்ள நிலையில், வாக்குகளைப் பதிவு செய்ய எதிர்வரும் 4 ஆம் திகதி வரை அவகாசம் உள்ளது.

இப்போது மோடிக்குக் கிடைத்துள்ள வாக்குகள் சராசரி நீடித்தால், இந்த ஆண்டின் பிரபலமாக 'டைம்ஸ்' பத்திரிகையில் அவர் தெரிவாக வாய்ப்புள்ளது. கடந்த ஆண்டின் 'டைம்ஸ்' பிரபலமாக ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கெல் தெரிவாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# நாடாளுமன்றை தொடர்ச்சியாக முற்றாக முடக்கி விடத் தீர்மானம்

## எதிர்க்கட்சிகள் கூடி ஆலோசனை

டில்லி, டிசெ.01

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் பத்து நாள்களுக்கும் மேலாக முடக்கப்பட்டுவரும் நிலையில், தொடர்ந்து அவையில் கூச்சல் குழப்பத்தை ஏற்படுத்தி நாடாளுமன்றத்தை முற்றாக முடக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பித்து எதிர்வரும் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. கூட்டத்தொடர் ஆரம்பித்த முதல் நாளில் இருந்து ரூபா தாள்கள் மீளப்பெறப்பட்ட விவகாரத்தை கையில் எடுத்து, எதிர்க்கட்சிகள் அவையை முடக்கி வருகின்றன.

எதிர்க்கட்சிகளின் இடைவிடாத அமளியால், இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த 28 ஆம் திகதி, கடும் அமளிக்கு இடையே திருத்தப்பட்ட வருமான வரிப் பிரேரணையை மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி தாக்கல் செய்தார். இதில், தாமாக முன்வந்து கணக்கில் காட்டப்பட்ட வருமானத்துக்கு 50 சதவீதம் வரை வரி விதிக்கப்படும் என்றும், கணக்கில்காட்டப்படாத தொகை வருமான வரித்துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டால் 85 சதவீதம் வரை வரிவிதிக்கப்படும் என்பன உள்ளிட்ட பல அம்சங்கள் இடம்பெற்றிருந்தன.

கறுப்புப் பணம் வைத்திருப்போருக்கு மேலும் நெருக்கடி அளிக்கும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தப்பட்ட வருமான வரித் துறைச் சட்ட பிரேரணை நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. ரூபா தாள்கள் விவகாரத்துடன் சேர்த்து, புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ள வருமான வரிச்சட்ட திருத்தத்துக்கும் எதிர்ப்புத் தெரிவித்து, அமளியில் ஈடுபட எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

இதுதொடர்பாக நேற்று எதிர்க்கட்சிகள் கூடி ஆலோசனை நடத்தியுள்ளன. இந்தக் கூட்டத்தில் ஐக்கிய ஜனதாத் தளம் கட்சியும் கலந்து கொண்டுள்ளன. இந்நிலையில், இவ் விவகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதியைச் சந்திக்க எதிர்க்கட்சிகள் முடிவு எடுத்துள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

# சினிமா தியேட்டர்களில் தேசியகீதம் கட்டாயம்


## உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவு

டில்லி, டிசெ.01

சினிமா தியேட்டர்களில் கட்டாயம் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

வழக்கு ஒன்றில் உத்தரவு பிறப்பித்த உச்ச நீதிமன்றம் நாடு முழுவதிலும் சினிமாதியேட்டர்களில் படம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தேசியகீதம் கட்டாயம் இசைக்கப்பட வேண்டும். தேசியகீதம் இசைக்கப்படும் போது திரையில் தேசிய கொடி காட்டப்பட வேண்டும். தேசியகீதம் இசைக்கப்படும் போது தியேட்டரில் உள்ள அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும். எந்தக் காரணத்துக்காகவும், தேசிய கீதத்தின் சுருக்க வடிவம் இசைக்கப்படக் கூடாது. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவை கட்டாயம் நிறைவேற்றுவோம். இந்த உத்தரவை நிறைவேற்றுவது தொடர்பாக மாநில அரசுகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப்படும் என்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு உறுதி அளித்துள்ளது.(எ)



கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவின் நினைவாக கேரள மாநிலம், கோவளம் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மணற்சிற்பம்.

# சோனியா காந்தி மருத்துவமனையில்



டில்லி, டிசெ.01

காங்கிரஸ் தலைவர் சோனியா, உடல் நலக் குறைவால் நேற்று முன்தினம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ந்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ரன்தீப் சுர்ஜேவாலா தெரிவித்தவை வருமாறு:-

நோய்த் தொற்று காரணமாக, சோனியாவுக்கு வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

சிகிச்சைக்காக, அவர், டில்லி கங்காராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வைத்தியர்கள் சிறந்த சிகிச்சை அளித்துவருகின்றனர்.

தேவையான பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

ஓரிரு நாளில், சோனியா வீடு திரும்பலாம் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன் பின் அவர் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்பார்.- என்றார். (எ)

# ரூபா தாள் மீளப் பெற்ற விவகாரம்; உச்ச நீதிமன்றம் இன்று விசாரணை

டில்லி, டிசெ.01

மத்திய அரசின் ரூபா தாள்கள் மீளப் பெற்றமைக்கு எதிராக ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட மனுக்களுடன் 2 புதிய மனுக்களையும் சேர்த்து உச்ச நீதிமன்றம் இன்று விசாரணை நடத்தவுள்ளது.

ரூபா தாள்கள் மீளப் பெற்றமையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஏற்கெனவே பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்தநிலையில் கேரளத்தைச் சேர்ந்த கூட்டுறவு வங்கிகள் சார்பில், தங்களையும் வழக்கமான அரச வங்கிகளைப் போல் செயற்பட அனுமதிக்குமாறு கோரி மனு ஒன்று நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

ஏனைய வங்கிகளைப் போல் பழைய ரூபா தாள்களை மாற்றித் தருவதற்கு கூட்டுறவு வங்கிகளுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இது பாரபட்சமானது. ஏனெனில், நாங்களும் ரிசர்வ் வங்கி விதிமுறைகளின்படியே செயற்படுகிறோம். எனவே, ரூபா தாள்களை மாற்றித்தர எங்களுக்கும் அதிகாரமளித்து உத்தரவிட வேண்டும்- என்றுள்ளது.

இதேபோல், டில்லி பா.ஜ.க. செய்தித் தொடர்பாளரும், பிரபல வழக்குரைஞருமான அஸ்வினி குமார் உபாத்யாயவும் ஒரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அதில் அவர் கூறியுள்ளவை வருமாறு:-

100 ரூபாவுக்கு மேல் மதிப்புடைய அனைத்து ரூபா தாள்களும் திரும்பப்பெறப்பட வேண்டும். ஊழலை ஒழிக்கவும், கறுப்புப் பணப் புழக்கம், பயங்கரவாதம், கடத்தல், லஞ்சம் போன்றவற்றைக் கட்டுப்படுத்தவும் இது அவசியமாகும்.

இதற்கு உரிய உத்தரவை நீதிமன்றம் பிறப்பிக்க வேண்டும் -என்றுள்ளது.

மேற்கண்ட 2 மனுக்களும் உச்ச நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தன. அப்போது, ரூபா தாள்கள் மீளப் பெற்றமையை எதிர்த்து ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட மனுக்களுடன் இந்த 2 மனுக்களையும் இணைத்து, இன்று விசாரிப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர். (எ)

# இன்று கரையைக் கடக்கும் புயல் தமிழகம், புதுச்சேரியில் கனமழை

சென்னை, டிசெ.01

சென்னையை நோக்கி வரும் புயல் இன்று கரையைக் கடப்பதால் தமிழகம், புதுச்சேரியில் இன்று கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னைக்கு தென் கிழக்கு வங்கக் கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இது சென்னையிலிருந்து ஆயிரத்து 70 கிலோ மீற்றர் தொலைவிலும், புதுச்சேரியில் இருந்து ஆயிரத்து 30 கிலோ மீற்றர் தொலைவிலும், இலங்கையின் திருகோணமலையில் இருந்து 720 கிலோ மீற்றர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளது.

இந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை அடுத்த 24 மணி நேரத்தில் வலுவான காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறி வடமேற்குத் திசையை நோக்கி நகரத் தொடங்கும்.

இது அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் வலுப்பெற்று புயலாக மாறும்.

சென்னையை நோக்கி வரும் இந்தப் புயல் இன்று காலை சென்னை- வேதாரண்யம் இடையே கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்றும் நாளையும் கடலோரப் பகுதிகளில் மிகக் கன மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது.

மேலும் கடலோரப் பகுதிகளில் மணிக்கு சுமார் 45-55 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசும். சில நேரங்களில் மணிக்கு 65 கிலோ மீற்றர் வேகத்திலும் காற்று வீசக் கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

காலைக்கதிர் Kalaikkathir



## ருவாண்டா இனப்படுகொலை விசாரணை ஆரம்பம்

ருவாண்டாவில் 1994 ஆம் ஆண்டு இடம் பெற்ற இனப்படுகொலைகளுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் 20 பிரான்ஸ் அதிகாரிகளுக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ருவாண்டாவின் பிரதம விசாரணையாளர் ரிட்சட் முஹுமுசா இதனைத் தெரிவித்தார்.

இந்த விசாரணை தொடர்பில் பிரான்ஸ் அதிகாரிகளின் உயரிய ஒத்துழைப்புத் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்தப் படுகொலைகளை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

## கொலம்பியாவில் 3 தினங்கள் துக்கம்

கொலம்பியா, டிசெ.01

கொலம்பியாவில் இடம் பெற்ற விமான விபத்தில் உயிரிழந்த பிரேசில் நாட்டைச்சேர்ந்த காற்பந்தாட்ட வீரர்களுக்காக 3 நாள்கள் துக்க தினமாக அந்த நாட்டு ஜனாதி பதி மைக்கேல் டெமர் அறிவித்துள்ளார். வீரர்கள் பயணம் செய்த அந்த விமானம் கொலம்பியாவின் மெடலின் நகரை அண்மித்த போது மோசமான கால நிலையால் மலைப்பாங்கான இடத்தில் விழுந்து நொறுங் கியது. இந்த விமானத்தில் கால்பந்து விளையாட்டு வீரர்கள், செய்தியாளர்கள், விமான ஊழியர்கள் என மொத்தம் 81 பேர்பயணம்செய்தனர்.

பெரும்பாலோர் பலியாகியுள்ளனர். மின்சாரக் கோளாறு ஏற்பட்டதாக விமானி தகவல் அளித்துள்ளார். பிரேசிலின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த சிறிய அணியான சப்பகோ யென்ஸ் கால்பந்து அணி, அடிமட்ட நிலையிலிருந்து உயர்ந்து, தென் அமெரிக்காவின் 2 ஆவது பெரிய கிளப் போட்டியின் இறுதி போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது. (எ)

# ஐ.நாவில் நிறைவேறியது புதிய பொருளாதாரத்தடை

## வடகொரியாவின் ஆணவத்துக்குத் தகுந்த பதிலடி

நியூயோர்க், டிசெ.01

வடகொரியா மீது 15 உறுப்பு நாடுகளின் ஒப்புதலுடன் ஐ.நா.பாதுகாப்புச்சபையில் நேற்று புதிய பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது.

கிழக்காசியக் கண்டத்தின் கொரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள முக்கிய நாடான வடகொரியா, கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது. இருப்பினும், 2006 ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பை பொருள்படுத்தாமலும், சர்வதேச ஒப்பந்தங்களைப் புறக்கணித்தும் அணுஆயுத சோதனைகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

அந்த நாடு தொடர்ந்து 3 முறை அணுகுண்டுச் சோதனைகளை நடத்தி உள்ளது. அதைத் தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் திகதி அதிரடியாக அணுகுண்டை விடப் பல மடங்கு சக்தி மிக்க ஹைட்ரஜன் குண்டை வெடித்துச் சோதித்தது. இதுவும் அணு குண்டு வகையில் தான் கணக்கில் கொள்ளப்படுகிறது. அதன்படி அந்த நாடு இதுவரை 4 முறை அணுகுண்டுச் சோதனைகளை நடத்தி உள்ளதாக சர்வதேச நாடுகள் பதிவு செய்துள்ளன.

இதன்காரணமாக, வடகொரியாமீது ஐ.நா. பாதுகாப்புச் சபையும், அமெரிக்காவும் மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. எனினும் அந்த நாடு, தற்காப்பு என்ற பெயரில் தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது.



வடகொரியாவின் இந்த அத்துமீறலுக்கு அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

மாதந்தோறும் ஒரு முறையோ, இருமுறையோ இந்த ஏவுகணைப் பரிசோதனைகளை மேற்கொள்ள வடகொரியா தவறுவதில்லை. வடகொரியாவின் இந்த ஆணவத்துக்கு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையை பல நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இதற்கான வரைவுத் தீர்மானம் ஒன்றையும் அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகள் உருவாக்கின. இந்தத் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையில் கடந்த புதன்கிழமை தாக்கல் செய்தன. இந்தத் தீர்மானத்தின்மீது ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நேற்று வாக்கெடுப்பு நடைபெற்றது.

வடகொரியாவிடம் இருந்து நிலக்கரியை இறக்குமதி செய்யக் கூடாது என்று பிறநாடுகளுக்குத் தடை பிறப்பிப்பது உட்பட அந்த நாட்டுக்குப் பொருளாதார நெருக்கடியைக் கொடுக்கக் கூடிய பல்வேறு முக்கிய அம்சங்கள் இந்தத் தீர்மானத்தில் இடம்பெற்றுள்ளன.

இந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை ஆதரிக்கப் போவதாக வெட்டுரிமை (வீட்டோ) அதிகாரம் படைத்த அமெரிக்கா, சீனா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இடம்பெற்றுள்ள 15 நாடுகளும் ஒருமனதாக முடிவு செய்துள்ளன. (எ)

## அமெரிக்காவில் தொழிலாளர் போராட்டம்!



சம்பள உயர்வுக் கோரிக்கையை வலியுறுத்தி அமெரிக்கா முழுவதும் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதில் ஒரு மணி நேரத்துக்கு குறைந்த பட்சம் சம்பளமாக 15 டொலர் வழங்க நிர்ணயிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். நியூயோர்க் நகரில் நடைபெற்ற போராட்டத்தில் 350 இற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். அதில் சுமார் 25 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

## தாய்லாந்தின் புதிய மன்னராக மறைந்த பூமிபோலின் மகன்!

பாங்கொக், டிசெ.01

தாய்லாந்து நாட்டுக்கான புதிய மன்னராக மறைந்த பூமிபோலின் மகன் பட்டத்து இளவரசர் மகா வஜிர லோங் கோர்ன் முடிசூடிக் கொள்ள அந்தநாட்டின் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தாய்லாந்து மன்னராக இருந்தவர் பூமிபோல் அது லயதேஷ். கடந்த 70 ஆண்டுகள் அந்த நாட்டின் மன்னராக ஆட்சியிலிருந்தார். அதன் மூலம் உலகின் நீண்ட நாள் மன்னராகப் பதவி வகித்தவர் என்ற பெருமை பெற்றிருந்த பூமிபோல் கடந்த ஒக்ரோபர் 13 ஆம் திகதி மரணம் அடைந்தார். இதையடுத்து, பட்டத்து இளவரசர் மகா வஜிரலோங் கோர்ன் என்பவரை புதிய மன்னராக அந்தநாட்டின் பிரதமர் பிரயூத் சான்-ஓச்சா அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்புக்கு நேற்றுமுன்தினம் தாய்லாந்து அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதன் அடுத்த கட்டமாக தாய்லாந்து மன்னராகப் பதவி ஏற்றுக் கொள்ளும்படி மகா வஜிரலோங் கோர்னுக்கு தாய்லாந்து நாடாளுமன்ற சபாநாயகர் அழைப்பு விடுப்பார்.(எ)

## சுமாத்ராவில் மீண்டும் பெரிய நிலநடுக்கம் ஏற்படும் அபாயம்

### விஞ்ஞானிகள் எச்சரிக்கை

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவில் மேலும் அச்சுறுத்தலான நில நடுக்கம் ஏற்படக் கூடும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவில் உள்ள பந்த அஸே தீவில் பெரிய நில நடுக்கம் ஏற்படலாம் என்று ஆஸ்திரேலிய பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜொனத்தன் பவ்னல் உட்பட பல தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்தத் தீவு கடல் மட்டத்தில் இருந்து 7 கிலோ மீற்றர் ஆழத்தில் அமைந்துள்ளது. சுமாத்ரா கடலினுள் நூற்றுக்கணக்கிலான நிலப் பிளவுகள் காணப்படுகின்றன என்று லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சில தீவுகளில் நிலப் பிளவுகள் 120 கிலோ மீற்றர் தூரம் வரை அதிகரித்துள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அதற்கமைய 60 ஆயிரம் கிலோமீற்றர் அளவிலான பகுதி நிலப்பிளவுகளின் பிரதான தட்டு பிரிந்து காணப்படுவதாக அந்தத் தரப்பினர் கூறியுள்ளனர்.

தற்போதைய நிலையில் இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவுக்கு அருகில் மேலும் ஒரு நில நடுக்கத்துடனான சுனாமி ஒன்று ஏற்படக் கூடும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

எப்படியிருப்பினும் நில நடுக்கம் மற்றும் பெரியளவில் சுனாமி ஏற்படுவதற்கு முன்னர் முழுமையான எச்சரிக்கையை விடுக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (எ)

## 117 ஆவது பிறந்ததினத்தை கொண்டாடி மகிழ்ந்த மூதாட்டி!

### 3 நூற்றாண்டுகளில் வாழ்ந்த சிறப்பு

ரோம், டிசெ.01


உலகின் மிகவும் வயதான மூதாட்டியான இத்தாலியைச் சேர்ந்த எம்மா மோரேனோ தனது 117 ஆவது பிறந்தநாளை நேற்று முன்தினம் சிறப்பாகக் கொண்டாடினார்.

இத்தாலியைச் சேர்ந்த இவர், 1899 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி பிறந்தார். 19 ஆம் நூற்றாண்டில் பிறந்து, உயிர் வாழும் இறுதி நபர் இவர் தான். 19, 20, 21 ஆகிய 3 நூற்றாண்டுகளில் வாழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



இத்தாலியின் எம்மா மோரேனோவுக்கு நேற்று முன்தினம் 117 ஆவது பிறந்தநாள். பிறந்தநாளை முன்னிட்டு இத்தாலியின் வெர்பானியா பகுதியில் உள்ள அவரது சிறிய அடுக்குமாடிக் குடியிருப்பில் நண்பர்கள் முன்னிலையில் வெள்ளை நிற கேக் வெட்டிப் பிறந்த நாளைக் கொண்டாடினார். இது நாள்வரை உடல் நலத்துடன் வாழும் எம்மா, ஒரு நாளைக்கு 2 முட்டைகள், சில பிஸ்கட்டுகள் மட்டுமே சாப்பிடுகிறேன் என்று கூறினார். (எ)

# ‘எயிட்ஸ்’: விழிப்புணர்வு ஏற்படுத்துவோம்!



திருமதி மலர்விழி கனகசபை
உதவிக் கல்விப் பணிப்பாளர்(அழகியல்)
தீவக கல்வி வலயம்.

இன்று டிசெம்பர் முதலாம் திகதி சர்வதேச எயிட்ஸ் தடுப்புத் தினமா கும்.

அந்த வகையில் இன்று நாடெங்கிலும் எயிட்ஸ் நோயிலிருந்து பொது மக்களை காப்பாற்றுவது சம்பந்தமான கருத்தரங்குகள், விழிப்புணர்வு தெருக் கூத்துகள் , அறிவுறுத்தல் கூட்டங்கள் இடம்பெறுகின்றன.

எம்மை நேசிப்பவர்களுக்கு என்றும் விசுவாசமாக இருப்போம். எம்மை மட்டுமன்றி எம் அன்புக்குரியவர்களையும் எயிட்ஸ் நோயிலிருந்து பாதுகாப்பது எமது தலையாய பொறுப்பும் கடமையுமாகும்.

விரும்பியோ, விரும்பாமலோ ஆபத்தான பாலியல் தொடர்பு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்தால் ஒவ்வொருவரும் உரிய மருத்துவ ஆலோசனை பெற்றுக் கொள்வது மிக முக்கியமாகும். எயிட்ஸ் நோய் பற்றி அனைவருக்கும் அறிவூட்டி அவர்களது பாதுகாப்புக்கு வலுவூட்டுவோம்.

உலகைஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் பயங்கர ஆட்கொல்லி நோய் எயிட்ஸ். இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் உலகின்பயங்கர ஆட்கொல்லி நோயாக எயிட்ஸ் இனம் காணப்பட்டுள்ளது.

இக்கொடிய நோயினால் உயிரிழப்பவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. இன்று வரை எயிட்ஸ்நோய்உலகளாவிய ரீதியில் இரண்டரைக் கோடி மக்களை பலியெடுத்து விட்டது எனலாம்.

> “எச்.ஐ.வி குருதிப் பரிசோதனையை தாமாக முன்வந்து மேற்கொள்ளாமையே இந்த எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கு காரணமாகின்றது. தகுந்த வேளையில் எச்.ஐ.வி குருதிப் பரிசோதனையைச் செய்யாமல் தள்ளிப் போடுவதால் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் எயிட்ஸ் நிலையிலும் இனம் காணப்பட்டுள்ளனர்.”

இலங்கையைப்பொறுத்தவரையில்எயிட்ஸ்நோயால் ஏற்படும் மரணங்கள் அதிகரித்து வருகின்றன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன . இந்த வருடத்தின் கடந்த பத்து மாத காலப் பகுதியில் இலங்கையில் மொத்தமாக 34பேர் இந் நோயால் மரணித்திருக்கின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவிக்கின்ற நிலையில் இது வரை இலங்கையில் 405 பேர்எயிட்ஸ்நோய்க்கு பலியாகி இருக்கின்றனர்.

இதில் 50வீதத்துக்கு அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பால்வினை நோய்கள் மற்றும் எச்.ஐ.வி எயிட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் கடந்த 10 மாதங்களில் 215 பேர் இந்த நோய்க்கு ஆளாகியிருக்கின்றனர் என்றும் அவர்களுள் பெரும்பாலானோர் 25-50 வயதுக்கு இடைப்பட்டோர் எனவும் எயிட்ஸ் நோயின் ஆரம்ப கட்டத்திலேயே உரிய சிகிச்சை பெற்றுக் கொள்ளாமை அவர்களின் மரணங்களுக்கு காரணம் எனவும் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை புதிதாக எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவரின் எண்ணிக்கை 2014ஆம் ஆண்டு 13 என இனம் காணப்பட்டுள்ளது.

ஆனாலும் எச்.ஐ.வி குருதிப் பரிசோதனையை தாமாக முன்வந்து மேற்கொள்ளாமையே இந்த எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கு காரணமாகின்றது. தகுந்த வேளையில் எச்.ஐ.வி குருதிப் பரிசோதனையைச் செய்யாமல் தள்ளிப்போடுவதால் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் எயிட்ஸ் (Aids) நிலையிலும் இனம் காணப்பட்டுள்ளனர்.

கடந்தசிலவருடங்களாக எச்.ஐ.வி தொற்றுக்குரிய மருந்துகள் உலகம் முழுவதும் அறிமுகப்படுத்தி அதற்கான சிகிச்சை முறை வளர்ச்சி கண்டுள்ளமையால் எயிட்ஸ்/ எச்.ஐ.வி நோயால் ஏற்படும் சாவு வீதம் குறைவாகக் காணப்படுகின்றது.

இந்த நோய்க்குதரமான மருந்துகளைப் பெற்றுக் கொள்வது உயர்ந்த சிகிச்சை முறையை அளிப்பதும் உலகின் பல பாகங்களிலும் இன்றும் மிகப் பெரிய சவாலாகவே உள்ளது.

2015ஆம் ஆண்டு மூன்றாம் காலாண்டு புள்ளி விவரங்களின்படி 2241பேர் இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்கள் என இனம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பிரதானமாக பாலியல் தொடர்பு மூலமே தொற்று ஏற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதில் ஆண், பெண் பாலியல் தொடர் பாலேயே பெரும்பான்மையினர் தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர்.

தொற்றுக்கு உள்ளான ஒருவருடன்பாதுகாப்பற்ற முறையில் பாலியல் தொடர்பு கொள்ளுதல், போதை வஸ்துப் பாவனையாளர்கள் ஊசியைப் பகிர்ந்து உபயோகித்தல், தொற்றுக்குள்ளான தாயிலிருந்து சிசுவுக்கு - வயிற்றில் இருக்கும்போது, பிரசவ வேளையில்மற்றும் தாய்ப்பால் மூலமாகவும் இந் நோய் பரவும்.

எச்.ஐ.வி பற்றிய நல்ல அறிவைப் பெற்று தொற்றைத் தவிர்ப்பதற்கு பல வழிகள் உண்டு. குருதிப் பரிசோதனையை சகல மாவட்டங்களிலும் உள்ள அரச பாலியல் தொற்று சிகிச்சை நிலையங்களில் இலவசமாகவும், இரகசியமாகவும் செய்து கொள்ள முடியும்.

இதற்கென விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட வைத்திய நிபுணர்கள் கடமையாற்றுகின்றார்கள்.


நமது கலாசார கட்டமைப்பு தகர்ந்துள்ளது.



மேலைத்தேய கலாசாரம், உடை தொடக்கம் நடை வரை மக்களை ஆக்கிரமித்துள்ளது. மக்கள் விழிப்புணர்வு கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எயிட்ஸ்/ எச்.ஐ.வி தொற்றுதலைத் தடுக்க ஒருவனுக்கு ஒருத்தி என்ற எமது கலாசார பண்பை பேணி நடக்க வேண்டும்.

அரச வைத்தியசாலைகளில் இதற்கான தனிப் பிரிவில் உளவள துணை சிகிச்சைஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

எனவே இந்தப் பயங்கர ஆட்கொல்லிநோயிலிருந்து தப்பிக்க சிந்தித்துச் செயலாற்றி, பொறுப்புடன் இந்த மண்ணிலே நலமாக வாழ பிரார்த்திப்போமாக!



# கிளிநொச்சியில் முதல்முறையாக (KPL) பிரிமியல் லீக் 20க்கு இருபது போட்டிகள்










கிளிநொச்சி, டிசெ.01

கிளிநொச்சி மாவட்டத்தில் முதல்முறையாக 'கிளிநொச்சி பிரிமியல் லீக்' (KPL) 20 இருபது கடினப் பந்து துடுப்பாட்டப் போட்டி இடம்பெற்றுள்ளது.

வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட அணிகளைக் கொண்டு நடத்தப்பட்ட கிளிநொச்சி பிரிமியல் லீக் 20 இருபது சுற்றுப் போட்டிகளில் 12 அணிகள் கலந்து கொண்டன.

இறுதிப் போட்டியில் கிளிநொச்சி புதிய பாரதி அணியும் கிளிநொச்சி மத்தியதீர அணியும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிகொண்ட புதிய பாரதி அணியினர் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தனர்.

இந்த அணி 16 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய தீர அணி 17.5 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 116 ஓட்டங்களை பெற்றது.

எனவே, கிளிநொச்சி மத்தியதீர அணி 2 விக்கெட்டுக்களினால் வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.

இந்தத் தொடரின் ஆட்ட நாயகனாக கிளிநொச்சி புதிய பாரதி அணியின் மதுசன் தெரிவு செய்யப்பட்டார். இவர் (கே.பி.எல்) தொடரில் 129 ஓட்டங்களைப் பெற்றதுடன், 10 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி உள்ளார்.

தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக கிளிநொச்சி மத்திய தீர அணியைச் சேர்ந்த அஜித் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் (கே.பி.எல்) தொடரில் பதினொரு விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

காவேரி கலாமன்றத்தின் பணிப்பாளர் வணபிதா ஜேசுவா மற்றும் கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடுப்பு பிரிவின் வைத்தியர் ஜெயராசா ஆகியோர் சாதனையாளர்களுக்கும் வெற்றியீட்டிய அணிக்கும் வெற்றிக் கிண்ணங்களை வழங்கிவைத்தார்கள். (க-70)

# தென்னாபிரிக்க தொடரில் மெத்தியுஸ், சந்திமல்!



கொழும்பு, டிசெ.01

இலங்கை அணியின் தலைவர் எஞ்சலோ மெத்தியுஸ் மற்றும் உபதலைவர் சந்திமல் ஆகியோர் உபாதையிலிருந்து நீங்கியுள்ளதுடன், தென்னாபிரிக்க தொடருக்குத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனை மெத்தியுஸ் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சந்திமல் மற்றும் வேகப் பந்து வீச்சாளர் துஸ்மந்த சமீர ஆகியோர் உபாதைகளிலிருந்து குணமாகியுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நானும் தற்போது பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றேன்.

தம்மிக்க பிரசாத் உபாதைகளில் இருந்து நீங்குவதற்கு சற்றுக் காலம் எடுக்கும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.- என்றார்.

# இந்தியன் சூப்பர் லீக் போட்டி: கொல்கத்தா - கேரளா சமநிலை



கொல்கத்தா, டிசெ.01

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் அட்லெடிகோ டீ கொல் கத்தா-கேரளா பிளாஸ்டர்ஸ் எப்.சி. அணிகளுக்கு இடையேயான போட்டி சமநிலையில் முடிந்துள்ளது.

3 ஆவது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டியில், கொல்கத்தாவில் நேற்று முன்தினம் இரவு நடந்த 51 ஆவது லீக் ஆட்டத்தில் அட்லெடிகோ டீ கொல் கத்தா-கேரளா பிளாஸ்டர்ஸ் எப்.சி. அணிகள் மோதின. இதில் வெற்றிபெறும் அணி அரை இறுதிக்குத் தகுதி பெறும் என்ற நிலையில் இந்த ஆட்டம் அரங்கேறியது.

6 ஆவது நிமிடத்தில் கேரளா அணி முதல் கோல் அடித்தது. 18 ஆவது நிமிடத்தில் கொல்கத்தா அணி பதில் கோல் திருப்பியது. அதன் பிறகு இரு அணிகளும் கோல் அடிக்க எடுத்த முய்றசிகளுக்கு கடைசி வரை பலன் கிடைக்கவில்லை. முடிவில் இந்த ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

முருங்கன், பரிகாரிகண்டல் அருணோதயா விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட அணியை ஊக்குவிக்கும் விதமாக, வட மாகாண அமைச்சர் பா. டெனிஸ்வரன் தனது பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட காலணிகளை வழங்கியுள்ளார்.



# பார்த்தீவ் பட்டேல் நீடிப்பார்!



மொகாலி, டிசெ.01

இங்கிலாந்துக்கு எதிராக மொகாலியில் இடம்பெற்ற 3 ஆவது டெஸ்ட் போட்டியில் அதிரடியாக விளையாடிய பார்த்தீவ் பட்டேல் தொடர்ந்தும் தொடக்க வீரராக நீடிப்பார் என்று அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக மொகாலியில் இடம்பெற்ற 3 ஆவது டெஸ்ட் போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்றது.

103 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் விளையாடிய இந்தியா 2 விக்கெட் இழப்புக்கு 104 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஏற்கனவே விசாகப் பட்டினத்தில் இடம்பெற்ற 2 ஆவது டெஸ்டில் வெற்றி பெற்றதால் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

ராஜ்கோட்டில் இடம்பெற்ற முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது.

இந்நிலையில், மொகாலி டெஸ்டில் பெற்ற வெற்றி குறித்து இந்திய அணி கப்டன் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஓர் ஆண்டாகவே சுழற்பந்து வீச்சுக்கு ஏற்ற 'பிட்ச்' குறித்து கேள்வி கேட்கப்படுகிறது. ஆடுகளம் குறித்து நாங்கள் அதிகமாக எதுவும் சொல்ல தேவையில்லை. நாங்கள் சிறந்த கிரிக்கெட்டை வெளிப்படுத்தி வருகிறோம். இதனால் வெற்றிகளைப் பெற்று வருகிறோம்.

பார்த்தீவ் பட்டேல் இந்த டெஸ்டில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இரண்டு இன்னிங்ஸிலும் அவர் அபாரமாக ஆடினார். முதல்தர போட்டியில் நன்றாக விளையாடிய அனுபவம் அவருக்கு கை கொடுத்தது.

வேகப்பந்து வீச்சை அவர் நம்பிக்கையுடன் எதிர்கொண்டு விளையாடினார். துடுப்பாட்ட வீரர் மற்றும் விக்கெட் காப்பாளர் ஆகிய இரண்டிலும் அபாரமாக செயல்பட்டார்.

எதிர்கால இந்திய அணியில் இடம்பெறுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளார். இதனால் தொடக்க வீரர்களைத் தேர்வு செய்வதில் போட்டி நிலவும். பார்த்தீவ் பட்டேல் தொடக்க வீரராக நீடிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் அணியின் முதன்மை விக்கெட் காப்பாளரான விருத்திமான் சகா காயம் அடைந்ததால் பார்த்தீவ் பட்டேல் அணியில் இடம்பெற்றார். குஜராத்தை சேர்ந்த 31 வயதான அவர் 8 ஆண்டு இடைவெளிக்கு பிறகு டெஸ்டில் ஆடினார். மொகாலி டெஸ்டில் அவர் மொத்தம் 109 ஓட்டங்களை எடுத்தார்.

முதல் இன்னிங்ஸில் 42 ஓட்டங்களும், 2 ஆவது இன்னிங்சில் 67 ஓட்டங்களையும் (ஆட்டம் இழக்காமல்) பெற்றார்.

அதேநேரத்தில் டெஸ்ட் அணியின் எங்களது முதன்மை விக்கெட் காப்பாளர் விருத்திமான் சகா தான். அதில் எந்த மாற்று கருத்தும் இல்லை என்று தேர்வு குழுத் தலைவர் எம்.எஸ்.கே.பிரசாத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மும்பையில் நடைபெறும் 4 ஆவது டெஸ்டுக்கு ராகுலும், விருத்திமான் சகாவும் உடல் தகுதி பெறும் பட்சத்தில் வீரர்கள் தேர்வு கோஹ்லிக்கு தலைவலியை ஏற்படுத்தும் என்றே கருதப்படுகிறது.

## யுவராஜ் சிங்கின் திருமணம்: களியாட்டத்தில் இந்திய வீரர்



சண்டிகார், டிசெ.01

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரரான யுவராஜ் சிங், பொலிவூட் நடிகையான ஹசல் கீச் திருமணம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இவர்களின் திருமண வைபவம் சண்டிகரிலுள்ள பிரபல ஹோட்டலில் நடைபெற்றது.

இதற்காக இந்திய அணி வீரர்கள் நேற்று முன்தினம் இரவே சென்று விட்டனர். அவர்களுக்காக கோக்டைல் பார்ட்டி வைக்கப்பட்டது.

இங்கிலாந்து அணியை வென்ற கையுடன் இந்திய வீரர்கள் அனைவரும் அங்கு சென்றதால் திருமண வீடே களைகட்டியுள்ளது.

இந்திய வீரர்கள் முரளி விஜய், பார்த்திவ் பட்டேல், இஷாந்த் ஷர்மா, உமேஷ் யாதவ், நெக்ரா, முகமது கைப், கபில்தேவ் போன்ற பிரபலங்களும் இந் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளனர்.

## ஹர்திக் பாண்டியாவுக்கு தோள்பட்டையில் காயம்



புதுடில்லி, டிசெ.01

இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்திக் பாண்டியாவுக்கு வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடும் வாய்ப்பை அவர் இழக்கலாம் எனத் தெரிகிறது.

இதுகுறித்து, பி.சி.சி.ஐ. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டிக்கு முன்பாக வலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது ஹர்திக் பாண்டியாவுக்கு வலது தோள்பட்டை பகுதியில் காயம் ஏற்பட்டது. அவரது தோள்பட்டையில் நூலிழை அளவில் விரிசல் விழுந்துள்ளதாக பி.சி.சி.ஐ. மருத்துவக் குழு தெரிவித்துள்ளது.

இந்தக் காயத்திலிருந்து அவர் மீண்டு வர 6 வார காலம் ஆகும். அவர் காயத்திலிருந்து மீண்டு வரும் வரையில் பி.சி.சி.ஐ. மருத்துவக் குழு அவரைத் தொடர்ந்து கண்காணிக்கும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் கே.எல். ராகுல், விக்கெட் காப்பாளர் விருத்திமான் சகா ஆகியோர் ஏற்கெனவே காயம் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இருதய சத்திரசிகிச்சைக்கு உள்ளான அறுவரில் நால்வர் அடுத்தடுத்து உயிரிழப்பு

## கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பரபரப்பு

கொழும்பு டிசெ.01

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை இருதய சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட 6 நோயாளர்களில் நால்வர் அடுத்தடுத்து உயிரிழந்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு மூவரடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்களில் ஆறு பேருக்கும் ஒரே நாளில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் நால்வர் அடுத்தடுத்து உயிரிழந்தமையால் இந்த விடயம் பூதாகரமானது.

நிலைமை மோசமானதை அடுத்து இது தொடர்பாக சுகாதார அமைச்சு நேரடியாகத் தலையிட்டுநிலைமைகளைஆராய்ந்தது.

இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவின் ஆலோசனைக்கமைய சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மஹிபால தலைமையில் விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மி சோமதுங்க, ஆய்வுகூட சேவைகள் பணிப்பாளர் கே.கே.பி. கமல் ஜயசிங்க, திடீர் சோதனைகள் பிரிவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ரோஹண டி சில்வா ஆகியோர் இக்குழுவில் அடங்கியுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

உயிரிழப்புக்கள் தொடர்பாக முறையான விசாரணை நடத்தி, அது தொடர்பான அறிக்கையை நேற்று உடனடியாகவே சுகாதார அமைச்சுக்கு சமர்பிக்குமாறு அந்தக் குழுவினர் பணிக்கப்பட்டனர். (ம)

# இருதய சத்திரசிகிச்சை செய்யப்பட்ட நால்வரின் மரணத்துக்கு காரணம் 'டை'?

## அந்த வகைகளுக்கு தற்காலிகத் தடை

கொழும்பு டிசெ.01

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நான்கு நோயாளர்களின் உயிரிழப்புக்கு, அந்த சத்திர சிகிச்சையின்போது பயன்படுத்தப்பட்ட டை (dye) காரணமாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த டை (dye) வகையை மருத்துவப் பயன்பாட்டில் இருந்து தற்காலிகமாக நீக்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இருதய சத்திரசிகிச்சைக்காக பயன்படுத்துகின்ற அந்த வகை டைகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, மருந்து விநியோகப் பிரிவுக்கு அறிவித்துள்ளார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த டை வகை தொடர்பில் தேசிய ஔடத ஒழுங்குமுறை அதிகாரசபையினால் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், வடகொழும்பு, தேசிய வைத்தியசாலை, மொனராகலை, கராபிட்டிய, தெற்கு, கொழும்பு, பதுளை, குருநாகல், களுத்துறை மற்றும் பேராதனை போன்ற வைத்தியசாலைகளில் குறித்த டை வகை மற்றும் ஊசி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று மருந்து விநியோகப்பிரிவு வைத்தியசாலை பணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# யாழ் நகரில் கலை இலக்கிய சங்கமம்

கத்தோலிக்க இலக்கிய வட்டம் தனது 30 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தும் 'கலை இலக்கிய சங்கமம்' நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பானம் கியூடெக் கரித்தாஸ் மண்டபத்தில் இலக்கிய வட்டத்தின் தலைவரும் மடு கல்வி வலயக் கல்விப் பணிப்பாளருமானயோன்குயின்ரன் தலைமையில் நடைபெறும்.

வடமாகாணசபை உறுப்பினர் இ.ஆர்னோல்ட் பிரதம விருந்தினராகவும், யாழ்.கோட்டக்கல்வி அதிகாரி எவ்.எக்ஸ்.அன்ரன் கௌரவ விருந்தினராகவும் அருட்பணிசெ.அன்புராஜாசிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். பரிசளிப்பு, கௌரவிப்பு நிகழ்வுகள் மற்றும் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம் பெறும். (உ)

# மினி பஸ்ஸில் கைப்பையை வெட்டி 'பேர்ஸ்' அபேஸ்!

யாழ்ப்பாணம், டிசெ.01

மினிபஸ்ஸில் நின்ற நிலையில் பயணஞ்செய்துகொண்டிருந்த வயயோதிபப்பெண் ஒருவர் மணிப்பேர்ஸை திருடனிடம் பறிகொடுத்துள்ளார். தோளில் தொங்கவிடப்பட்டிருந்த கைப்பையை பிளேட்டினால் தந்திரமாக வெட்டிய திருடன், அதற்குள்ளிருந்த அடையாள அட்டை, வங்கிப் புத்தகங்கள், பணம் ஆகியவை அடங்கிய மணிப் பேர்ஸை எடுத்துச்சென்றுள்ளான்.

இத்துணிகரமான திருட்டு நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து மாதகல் நோக்கிச் சென்று கொண்டிருந்த மினிபஸ்ஸில் இடம்பெற்றுள்ளது.

மானிப்பாயைச் சேர்ந்த வயோதிபப்பெண்ணே பாதிக்கப்பட்டவர் ஆவார். யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து மாதகல் நோக்கி செல்லும் போதே சம்பவம் நிகழ்ந்துள்ளது. வீட்டுக்குச் சென்ற பின்னரே அவருக்கு பொருள்களை பறிகொடுத்தது தெரியவந்தது.

## உப்பளங்களைத் தனியார்மயப்படுத்த எதிர்ப்பு

# ஆனையிறவு உப்பளத்துக்கு முன்பாக இன்று பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, டிசெ.01

ஆனையிறவுமற்றும்குறிஞ்சாத்தீவு உப்பளங்களை தனியார் மயப்படுத்த எடுக்கப்பட்டு வரும்நடவடிக்கைகளுக்குஎதிர்ப்புத் தெரிவித்து இன்று வியாழக்கிழமை காலை ஆனையிறவு உப்பளத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

ஆனையிறவுமற்றும்குறிஞ்சாத்தீவுஉப்பளங்களுக்குஅண்மையில் உள்ள கிராமங்களின் பொது அமைப்புக்கள் இன்று காலை 9 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

1938ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த உப்பளங்கள், 1990ஆம் ஆண்டு வரை மிகுந்த வினைத்திறனோடு செயற்படுத்தப்பட்டமையால் அதிக வருமானம் ஈட்டப்பட்டது. ஆனையிறவு உப்பளத்தின் ஆண்டுக்கான உப்பு உற்பத்தி 30ஆயிரம்மெற்றிக்தொன்னாகவும் குறிஞ்சாத்தீவு உப் பளத்தின் ஆண்டுக்கான உற்பத்தி 40ஆயிரம்மெற்றிக்தொன்னாகவும் இருந்துள்ளன.

ஆனால், 2016 ஆம் ஆண்டு 1100 மெற்றிக் தொன் உப்புமட்டுமேஉற்பத்திசெய்யப்பட்டது. இவ்விருஉப்பளங்களின் புனரமைப்புக்கு அரசு போதுமான நிதி ஒதுக்காமையே இதற்கான காரணம் என்று அயல் கிராமங்களிலுள்ள பொது அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

அரசாங்கம்தனதுபிழையை நிவர்த்தி செய்வதை விடுத்து உப்பளங்களைத்தனியார்மயப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றது. எங்கள் வாழ்வாதாரத்துக்கு ஆதாரமாக உள்ள இந்த உப்பளங்களைத்தனியார்மயப்படுத்த நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என மேற்படி அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

தனியார் மயப்படுத்தலுக்கு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாகவே இன்று ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளப் போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ம-70)

# இளவாலை கன்னியர் மடத்துக்கு கிடைத்தது 100 தென்னங்கன்றுகள்

## தோட்டம் அமைக்க 'அன்பே சிவம்' வழங்கியது

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு அன்பே சிவம் அமைப்பு மரக்கன்றுகளை வழங்கி வருகிறது. இதன் ஒரு கட்டமாக, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் தென்னந் தோட்டம் ஒன்றை அமைப்பதற் காக 100 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

'அன்பே சிவம்' அமைப்பு சுவிற்சர்லாந்தில் சூரிச்சிவன் ஆலயத்தின் நிதியூட்டலில் இயங்கிவரும் ஒரு சமூகத் தொண்டு நிறுவனம் ஆகும். இவ்வமைப்பு இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப்பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது. அத்தோடு, ஆண்டுதோறும் வட மாகாண மரநடுகை மாத காலப் பகுதியில் மரநடுகையிலும் ஈடு பட்டு வருகின்றது.

இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மடம் மகாவித்தியாலயம் அண்மையில் கொள்வனவு செய்துள்ள தனது காணியில் தென்னந் தோட்டம் அமைப்பதற்குத் தேவையான தென்னங்கன்றுகளை வழங்குமாறு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் கோரிக்கை விடுத்திருந்தது. அதன்அடிப்படையிலேயே அன்பே சிவம் அமைப்பு இப்பாடசாலைக்கு நூறு நல்லின தென்னங்கன்றுகளை வழங்கி இருந்தது.

தென்னங்கன்றுகளை வழங்கும் நிகழ்வில் வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் அன்பே சிவம் நிறுவனத்தின் இலங்கைக்கான தலைவர் அ.அருளானந்த சோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புலம்பெயர்ந்து...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட இளைஞர்கழக சம்மேளனத்தின் யுவதிகள் அணியினர் தேசிய ரீதியில் முதலாம் இடத்தையும் மற்றும் இளைஞர் அணியினர் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றனர். எமது அனுசரணையுடன் வெற்றியீட்டிய இளைஞர் யுவதிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.மாவட்ட இளைஞர்கழக சம்மேளன மண்டபத்தில் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் பேரின்பராசா சுதாகர் தலைமையில் 19.07.2016 வெகுவிமர்சையாக நடத்தி இருந்தோம்.

**வாகனங்களில் ஊர்வலமாக விளையாட்டு வீரர்கள்**

இந்தப்போட்டியில்வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளை கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து யாழ்.நகரப் பகுதியூடாக வாகனத்தில் யாழ்.இளைஞர்கழக சம்மேளனம் வரை ஊர்வலமாக அழைத்து வந்தார்கள்.

இவ்வாறு கிரிக்கெட், கால்பந்து, வலைப்பந்து மற்றும் கிராமியவிளையாட்டுக்கள் உள்ளிட்ட அனைத்துவிளையாட்டுத்துறைகளிலும் எமது மண்ணைச் சேர்ந்தவர்கள் வீர, வீராங்கனைகள் உலகில் பிரகாசிப்பதற்காக போட்டிகளை நடத்தி திறமைசாலிகளைஉருவாக்கிவருகின்றோம். சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளும் அளவுக்கு பயிற்சிகளை வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

*நீங்கள்ரெலோ இயக்கத்தின் கொள்கைபரப்புச்செயலாளராக இருக்கின்றீர்கள். அந்த வகையில் சமகால அரசியல் நடவடிக்கைகள் குறித்துக் கூறுவீர்களா?*

நான் வந்து முழு மூச்சாக மனிதாபிமான தொண்டுப் பணிகளை மேற்கொள்ளுபவர். எனினும் சிறுபராயத்தில்ரெலொஇயக்கத்தின் உறுப்பினராக இருந்தேன். பின்னர் 20 வயதில் லண்டனுக்கு இடம்பெயர்ந்து சென்றேன். பின்பு 25 வருடங்களுக்குப் பிற்பாடு தாயகம் வந்து சமூகப்பணிகளைச்செய்து வருகின்றேன். எமது தமிழ் மக்களின் தேவைகளையும் நலன்களையும் வெற்றி கொள்வதற்கு விரும்பியோ விரும்பாமலோ அரசியலில் இணைந்து செயற்பட வேண்டிய நிர்ப்பந்தங்கள் உள்ளன. அந்த வகையில் ரெலொ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளராகக் கடமை புரிகின்றேன்.

நல்லாட்சி என்ற பெயரில் அரசாங்கம்தம்காய்நகர்த்தலை மேற்கொண்டாலும் இனவாதத்தின் ஓசையை ஓழிக்க முடியவில்லை. இனவாதத்தை முற்றாக இல்லாமற் செய்யும் அரசியல் மாற்றங்கள் காலத்தின் தேவையாக இருக்கிறது. புதிய அரசமைப்புத் தொடர்பாக உபகுழுக்கள் தமது அபிப்பிராயங்களை அறிக்கைகளாகச் சமர்ப்பித்துள்ள காலகட்டத்தில் இனவாதத் தீ மூட்டல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

நல்லாட்சி என்ற பெயரில் புதிய அரசமைப்பு வரைவு, இன ஒற்றுமை நல்லிணக்கம் பற்றி எல்லாம்உரக்கப்பேசப்படுகிறது. உண்மையிலே இவை யாவும் வெறும்பேச்சாகமட்டுமேஇருந்து வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்தா விட்டால் வேறு எந்த விடயத்தை மக்கள் மத்தியில் முன்வைத்தாலும் மக்கள் நம்பப் போவதில்லை. மாறாக அழிவுகளும், சாபக்கேடுகளும் தலைதூக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

புதிய அரமைப்புத் தொடர்பாகப் பேசப்படுகிறது என்னைப் பொறுத் தவரையில் புதிய அரசமைப்பில்நாம்எதிர்பார்க்கும்விடயங்கள் முழுமையாக வரப் போவதில்லை. ஒன்று மட்டும் கூறலாம். 1972ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இலங்கையின் முதலாவது குடியரசுக்கான அரசமைப்பு மற்றும் அதன் பின்னர் 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டநிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசமைப்புஆகிய இரண்டும் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

ஆனாலும், இன்றைய சூழலில் புதிய அரசமைப்புத் தமிழ் மக்களின் பங்குபற்றுதலோடு வெளிவரவுள்ளது. இது தான் உண்மை. எது எவ்வாறாயினும் இலங்கையில் அமைதி, சமாதானம், இன ஒற்றுமை என்பன கட்டிஎழுப்பப்படவேண்டும். இனவாத ஒழிப்புக்கு நல்லதொரு சமிக்ஞைமிக்க புதியதொரு அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பது என்னுடைய அவா.

காலைக்கதிர்
Kalaikkathir

## 4 இலட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடவடிக்கைகளுக்கு கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியும் தனது ஒத்துழைப்பை வழங்கியிருந்தார் என மனு மூலம் குற்றம் சாட்டப்பட்டது.

இதன் மூலம் பிரதிவாதிகள் தனது மனித உரிமைகளை மீறியுள்ளனர் எனத் தீர்ப்பளிக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

தீர்ப்பை அறிவித்த நீதியரசர்கள் இந்த நடவடிக்கையின் மூலம் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஆகியோர் மனித உரிமைகளை மீறியுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

இதற்காக மேர்வின் சில்வா தனது சொந்தப் பணத்திலிருந்து நான்கு லட்சம் ரூபாவை மனுதாரருக்கு நஷ்டஈடாக வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதே போன்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 50 ஆயிரம் ரூபாவும் அரசாங்கம் ஒருலட்சரூபாவும் மனுதாரருக்கு நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என இந்தத் தீர்ப்பில் மேலும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)

## கோட்டாபயவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் லொஸ் ஏன்ஜல்ஸில் இலங்கைக்கு துணைத்தூதுவர்(கொன்சியூலர் ஜெனரல்) யாருமில்லை. எனினும், கோட்டாபய ராஜபக்ஷவின் ஒரே மகனான டமிந்த மனோஜ் ராஜபக்ஷவுக்காக, துணைத் தூதுவருக்கான இல்லம் என்ற பெயரில் அங்கு ஒரு வீட்டைவெளிவிவகார அமைச்சு வாடகைக்குப் பெற்றிருக்கின்றது. அதற்காக உத்தரவாத வைப்புத் தொகையாக 10ஆயிரம் அமெரிக்க டொலரும் வெளிவிவகார அமைச்சினால் செலுத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் எந்த அரச சேவையிலும் பணியில் இல்லாத மனோஜ் ராஜபக்ஷதான் இந்த வீட்டில் 21 மாதங்களாக வசித்திருந்திருக்கின்றார்.

அரச சேவையில் இல்லாத அவருக்கு பணியாளர்களாக உதவுவதற்காக இலங்கை இராணுவத்தின் இரண்டு அதிகாரிகளும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

சட்டவிரோதமாக இந்த இல்லத்தை அவர் பயன்படுத்தியமையால் இலங்கை அரசுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

கோட்டாபயவின் மகனுக்காகவே அந்த இல்லம் வெளிவிவகார அமைச்சினால் வாடகைக்குப் பெறப்பட்டிருக்கின்றது. 2015 ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு தோற்கடிக்கப்பட்டபின்னரும் அந்தநிலைமை தொடர்ந்திருக்கிறது. அந்த இல்லத்துக்கானவாடகையைவெளிவிவகார அமைச்சே செலுத்தி வந்தது.

2015 ஜனவரியில் நாம் அதைக் கண்டுபிடித்து நிறுத்தினோம்.

அதுவரை 21 மாதங்களுக்குமான வீட்டு வாடகையாக 2 கோடியே77லட்சம்ரூபாசெலுத்தப்பட்டுள்ளது. தவிரவும் அந்த வீட்டுக்கான மின் கட்டணம், எரிவாயுக் கட்டணம், கேபிள் ரீ.வி.இணைப்புமற்றும்தொலைபேசிக் கட்டணம் எல்லாமே இலங்கை மக்களின் வரிப் பணத்தில் இருந்தே செலுத்தப்பட்டுள்ளது. – இப்படி வெளிவிவகார அமைச்சர் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

## வெளிவிவகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனையடுத்தே ஹந்துன்நெத்தி எம்.பி. மேற்படி கோரிக்கையை முன்வைத்தார். அதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்தார். (உ)

## வருகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புயலாக வடமேற்கு திசையில் நகர்ந்து யாழ். குடா நாட்டை இலக்கு வைக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அது நாளை காலைக்குப் பின்னர் தமிழ்நாட்டின் கரையை கடக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் புயலினாலும் அதனைத் தொடர்ந்த நிலைமைகளினாலும் நாளை வெள்ளிக்கிழமை வரை வடக்கு, கிழக்கு, வட மத்திய மாகாணங்களில் சூறாவளிக்காற்றுவீசும் என்றும், நூறு மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பொழிவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

## தமிழகத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கின்ற நெருக்கத்தை, இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டுடன் கொண்டிருக்காத நிலையே காணப்படுகின்றது.

எமது மக்களது பல்வேறு பிரச்சினைகளை நாம் மிகவும் இலகுவாகத் தீர்த்துக் கொள்ள வேண்டுமானால், அதற்காக நாம் தமிழ் நாட்டுடனான உறவையும் வலுப்படுத்திக் கொள்வது அவசியம்.

குறிப்பாக, தற்போது மிக அதிகமான அளவில் போதைப் பொருள்கள், கேரளக் கஞ்சா போன்றவை தமிழ்நாட்டின் ஊடாகவே நமது நாட்டுக்குக் கடத்தப்படுவதாகத் தெரிய வருகின்றது. ஆகவே, இந்த முயற்சிகளை ஒடுக்கக்கூடிய வகையிலான ஏற்பாடுகளைப் போதிய வகையில் முன்னெடுப்பதற்கும்,

இந்திய கடற்றொழிலாளர்களது எல்லைகள் தாண்டியதும், தடை செய்யப்பட்ட உபகரணங்களைக் கொண்டதுமான கடற்றொழில் நடவடிக்கைகளையும், எமது கடல் வளங்கள் சுரண்டப்படு வதையும் போதியளவில் கட்டுப்படுத்திக் கொள்வதற்கும், இலங்கைக்குத் தேவையான நவீன தொழில்நுட்ப, தகவல் தொழில்நுட்பமென்பொருள்கள், மின்னியல் உபகரணங்கள், ஏனைய நுகர்வுப் பொருள்கள், மருந்து வகைகள் ஏனைய தொழில்சார் உபகரணங்களை மிகவும் மலிவான விலையில் இறக்குமதி செய்து கொள்வதற்கும், மற்றும் இதர பல அத்தியாவசியத் தேவைகளுக்காகவும், நாம் தமிழ் நாட்டுடனான நட்புறவை வளர்த்துக் கொள்வது அவசியம்.

அன்று தொட்டு இன்று வரை தமிழ் நாட்டு முதல்வர்களில் ஒருவர் கூட இலங்கைக்கான உத்தியோகபூர்வ நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டனர் என ஒரு வரலாறுகூட இல்லை. அதே நேரம், எமது நாட்டுத் தலைவர்கள், மத வழிபாடுகளில் கலந்து கொள்வதற்காகத் தமிழ் நாட்டிக்கு அடிக்கடி போய் வருகிறார்களே அன்றி, உத்தியோகபூர்வமான விஜயங்களைத் தமிழ்நாட்டுக்கு மேற்கொள்கின்ற நிலைமையும் இல்லை.

இலங்கைக்கான தமிழ் நாட்டுடனான நல்லுறவை வலுப்படுத்தக்கூடிய வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக தமிழ் நாட்டிலுள்ள இலங்கைக்கான தூதரகத்தைப் பலப்படுத்த வேண்டும். – என்றார்.

# பட்டதாரிகளுக்கு நேற்று ஆசிரியர் நியமனம்



கொழும்பு, நவ.01

கல்வி அமைச்சில் நேற்று புதன்கிழமை 269 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. தொழில்நுட்பம், நாடகமும் அரங்கியலும் பாடங்களைப் போதிப்பவர்களுக்கே இந்நியமனம் வழங்கப்பட்டது.

இவர்களில் 29 தமிழ் மொழி மூலமான ஆசிரியர்களும் 240 சிங்கள மொழி மூலமான ஆசிரியர்களும் அடங்குகின்றனர்.

இந்த ஆசிரியர்களில் மாகாண பாடசாலைகளுக்கு 137 பேரும் தேசிய பாடசாலைகளுக்கு 132 பேரும் நியமிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் அதிதிகளாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவாசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்குபற்றினர். அமைச்சின் செயலாளர்கள், அதிகாரிகள்உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் செயலாளர்களையும் ஒன்றாகச் சந்திக்கவிருக்கின்றனர்.

அந்தச் சந்திப்பின்போது எத்தகைய அணுகுமுறையைப் பின்பற்றுவது என்பது குறித்து ஆராய்வதற்காகவே கூட்டமைப்பின்எம்.பிக்கள், கூட்டமைப்பின் தலைவர் இரா .சம்பந்தன் தலைமையில் இன்று கூடுவர் எனதெரிவிக்கப்படுகின்றது. (உ)

## கிராம....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக மேற்படி ஆணைக்குழு அதிகாரிகள் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. (ம)

## ஒற்றையாட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு – செலவு திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த விவரங்களைத் தெரிவித்தார். அவர் அங்குகூறியவை வருமாறு:–

புதியஅரசமைப்புத்தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன விடயங்களுக்கு இணங்கியிருக்கின்றது என்று இங்கு கேள்வி எழுப்பட்டது.

நாம் எவற்றுக்கு இணங்கியுள்ளோம் என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

ஒன்று –

பிளவுபடுத்தப்படாத –

பிரிக்கப்பட முடியாத –

நாடு என்பதற்கே நாம் இணக்கம் தெரிவித்திருக்கின்றோம்.

அவ்வளவுதான் நாங்கள் இணங்கிய விடயம். இதை என்ன சொற்களில், எப்படி விவரிப்பது என்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

நாங்கள் 'ஒற்றையாட்சி' என்று சொல்லப்படுகின்ற முறைமைக்கு இணங்கவேயில்லை என்பதைத்தெளிவுபடுத்துகிறேன். பல நாடுகளில், பல பெயர்களில் சொல்லப்படும் இந்த ஆட்சி முறைக்குநாம்உடன்படவில்லை.

நாடாளுமன்ற ஆட்சி முறைக்கும் ஒற்றயாட்சி முறைக்கும் புகழ்பூத்த – பெயர்பெற்ற – பெரிய பிரித்தானிய ஆட்சிமுறை குறித்து குறிப்பிட விரும்புகின்றேன்.

அங்கு ஓர் அரசமைப்பு இல்லை. ஆனால் அது ஒற்றையாட்சி முறையான அரசு.

ஆனால் அந்த ஆட்சி முறையின் கீழ் 1921 இல் அந்த நாடு ஒரு பகுதியைப் பிரித்தெடுத்து அயர்லாந்து குடியரசாக அனுமதித்தது.

அதே போன்று அண்மையில் ஸ்கொட்லாந்துக்கு பிரிந்து போகும் உரிமையை வழங்கலாமா என்று அந்த நாடு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தியது. அந்த வாக்கெடுப்பு கூட முழு பிரித்தானியாவிலும் நடத்தப்படவில்லை. பிரிந்து போக வேண்டுமா என்று தீர்மானிக்க வேண்டிய ஸ்கொட்லாந்தில் மட்டுமே நடத்தப்பட்டது.

ஆகவே 'ஒற்றையாட்சி' முறைமையின் கீழ் ஒரு சட்டத்தை கொண்டு வருவதன் மூலம் நாட்டைத்துண்டுபடுத்த வாய்ப்புண்டு.

ஆனால் சமஷ்டி முறையில் அதற்கு இடமில்லை. ஏனெனில் சமஷ்டிக்கானது ஒரு சமூக ஒப்பந்தமாகும். அதிலிருந்து எந்த சமஷ்டி அமைப்பும் பிரிந்து போக முடியாது என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் அது உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த உண்மைகளை நாட்டு மக்களுக்கு எடுத்து விளக்காமல், அவர்கள் மத்தியில் சென்றால், வெறும் அர்த்தம் புரியாத சொற்களை வைத்துக் கொண்டு கோஷங்கள் மூலம் அரசியல் நடத்துவோரால் மக்கள் தவறாக வழிநடத்தப்பட்டு விடுவார்கள்.

ஆகவே, நாங்கள் சில விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

நாங்கள் பின்வரும் விடயத்தில் மிக உறுதியாக இருக்கிறோம்.

ஒன்று – பிளவுபடாத. அதுவும் வெறும் பிளவுபடாதது மட்டுமல்ல, எதிர்காலத்தில் பிரிக்கவே முடியாத ஒருநாடுதான் வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

எந்தச் சட்டத்தினாலும் கூட, எப்போதும் நாட்டைப் பிரிக்கவே முடியாது என்ற ஏற்பாடு அரசமைப்பில் இருக்க வேண்டும் என நாம் வற்புறுத்துகிறோம்.

இந்த ஒரு நாட்டுக்குள் மக்கள் தங்களின் இறைமையின் அடிப்படையில் எவ்வாறு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது என்பதற்கு நாம் அர்த்தம் உள்ள வகையில் ஒரு முறைமையை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

நான் இறைமையைப் பகிர்ந்து கொள்வது குறித்துப் பேசவில்லை. அப்படி இறைமையைக் கூடப் பகிர்ந்துகொள்ள முடியும். அப்படிப் பகிர்வதில் தவறில்லை. நான் அதனைக் கோரவில்லை.

ஆட்சிக்கான அதிகாரத்தைப் பகிருங்கள் என்றுதான் கோருகிறோம். மூன்று மட்டங்களில் பகிரலாம். மத்திய மட்டத்தில். மாகாண அல்லது பிராந்திய மட்டத்தில். உள்ளூராட்சி மட்டத்தில்.

இதை எமது மக்கள் புரிந்து கொண்டால் வெறும் சுலோகம் – கோஷம் – எழுப்பும் வலையில் வீழ்ந்து விடாமல் நாம் தெளிவாக முன்னேற முடியும்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் எமது நாடு பொறுப்பேற்றுக் கொண்ட – ஒப்புக் கொண்ட விடயம் உள்ளது.

இது அவர்களின் தீர்மானம் அல்ல. இலங்கையும் சேர்ந்து கொண்டு வந்த – முன்மொழிந்த – தீர்மானம் இது.

வேறு நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக – அல்லது அதனைப்பயன்படுத்தி – இலங்கை முன்னர்தான் ஏற்று, ஒப்புக் கொண்ட பொறுப்பிலிருந்து தப்பிக் கொள்ளலாம் எனச் சிலர் நினைக்கின்றார்கள்.

நாம் ஏறுக்கொண்ட இந்த பொறுப்புக்கள் எம்மீது வேறு யாராலும் சுமத்தப்பட்டவை அல்ல. அதேபோன்று ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளினால் எங்கள் மீது திணிக்கப்பட்டவையும் அல்ல.

இது நாங்கள் பிரேரித்துக் கொண்டு வந்த எமது பிரேரணையின் அடிப்படையிலான தீர்மானம். இது எமது தீர்மானம்.

இது நாங்கள் உலகத்திடம் கூறிய விடயம் 'நாங்கள் காயங்களை ஆற்றுவோம். நீதி நிலை நாட்டப்படும் என்பதை உறுதிப்படுத்துவோம், இது போன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் இடம்பெறாமையை உறுதிப்படுத்துவோம், எங்களுக்கு இடையிலான பிணக்குகளை வன்முறையின்றி அமைதி முறையில் தீர்ப்போம்' – என்றெல்லாம் வாக்குறுதி கொடுத்து அவற்றைச் செயற்படுத்துவதற்கு இணங்கியிருக்கிறோம்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளமையை நாம் வரவேற்கிறோம். எனினும், அதற்கு அடுத்ததாக அவ்வலுவலகத்தினால் மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்களில் தாமதம் நிலவுகிறது. இவ்வாறான தாமதங்களை காலத்தை கடத்தி தப்பிப்பதற்கான வழியாக சிலர் கருதுகின்றனர்.

இந்த நாட்டில் யுத்தம் உருவானமைக்கான அடிப்படைக் காரணங்கள் சில உள்ளன. அந்த அடிப்படைக்காரணங்கள் தீர்க்கப்பட வேண்டும். புதிய அரசமைப்பு இயற்றப்பட்டதன் பின்னர் நிறைவேற்றப்பட வேண்டிய ஏனைய விடயங்களும் காணப்படுகின்றன. அதற்கான வாக்குறுதிகளும் அளிக்கப்பட்டுள்ளன. அவ்வாறான நிலையில் தற்போது நடைபெற்று வரும் புதிய அரசமைப்பு செயற்பாடுகளின் மூலம் ஏனைய வாக்குறுதி அளித்த விடயங்களை நிறைவேற்றாமல் ஏமாற்றி விடலாம் என்று தட்டிக்கழிப்பதற்கு நாம் வழங்கி வரும் தற்போதைய ஆதரவைப் பயன்படுத்த முயற்சிக்கக் கூடாது.

இந்த சபையில் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாகக் கூறப்பட்டது. அந்தவகையில் 13ஆவது திருத்தத்தின் அமுலாக்கத்திலும் இவ்வாறான விடயங்கள்தான் இடம்பெற்றிருந்தன. ஒரு லட்சத்துக்கும் அதிகமான எமது மக்கள் உயிர்நீத்தமை இந்த 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்டதன் பின்னரே யாகும். அதற்கு முன்னர் அவ்வாறான பெருந்தொகையானவர்கள் உயிரிழக்கவில்லை. 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தியிருந்தால் அத்தகைய பாரிய இழப்பு ஏற்பட்டிருக்காது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

யுத்தம் நிறைவுக்கு வந்திருக்கின்றது. தேசிய இனப் பிரச்சினை என்பது விடுதலைப் புலிகள் அல்ல. விடுதலைப் புலிகள் என்பது தமிழ் மக்களின் பிரச்சினைகளின் வெளிப்பாடாகவே இருந்தது. அவர்கள் தற்போது இல்லாமையினால் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விட்டன என அர்த்தப்படுத்தக் கூடாது. பிரச்சினையின் வெளிப்பாடுகள் மட்டுமே அந்த அமைப்பின் செயற்பாடுகள் இன்மையால் இல்லாது போயுள்ளன. பயங்கரவாதம் மட்டுமே பிரச்சினை கிடையாது. பயங்கரவாதம் முடிந்துவிட்டது என்று அர்த்தப்படுத்தினால் அதுவும் தவறாகும்.– என்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.